விலை சதம் 60

பக்கங்கள் 10

பளிச்சிடும் வெண்மைக்கு
'அண்ணா நீலம்'
1 அவு,, 1/4 ரூ, 1/2 ரூ,
1 ரூ. பைக்கட்டுகளில்
விற்பனையாகிறது,
வசதிக்கேற்ற பைக்கட்டு
களில் பெற்றுக்கொள்ள
லாம்.
அண்ணா தொழிலகம்
இணுவில்.
தொலைபேசி 7412

ஈழநாடு
வார மலர்
THE EELANADU VARAMALAR

மில்க்வைற் தொழிலகம்
வர்த்தகப்பெருமக்களுக்கு
ஒரு பணிவான வேண்டுகோள்.
தயவுசெய்து எங்கள்
மில்க்வைற் தயாரிப்புக்களை
உரிய மேலுறைகளோடு
விற்பனை செய்ய
ஆதரவு நல்குங்கள்
மில்க்வைற்
யாழ்ப்பாணம்

மலர் 22 சித்திரை 29 ஜூஆகிர் 25 ஞாயிற்றுக்கிழமை (11—5—80) இதழ் 91

UNIVERSITY OF SRI LANKA JAFFNA CAMPUS
RECEIVED
1980-5-12
PERIODICALS DIVISION
LIBRARY

விவசாய போதனுபீடம் · பொறியியல் போதனுபீடம் · விவசாய ஆராய்ச்சி நிலையம்

# யாழ். மாவட்டத்தில் 300 ஏக்கர் காணியில் அமைக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக் கழக விவசாய போதனு பீடம், பொறியியல் பீடம், பிராந்திய விவசாய ஆராய்ச்சி நிலையம், தேசிய இளைஞர் சேவை மன்றம்' மக்கள் வங்கி, இலங்கை வங்கி ஆகியவற்றுக்கான கட்டடங்களை அமைக்க 300 ஏக்கர் காணி ஒதுக்கப்பட உள்ளது.

யாழ். அரசாங்க அதிபர் திரு. யோகேந்திரா துரைசுவாமி தலைமையில் கிளிநொச்சி உதவி அரசாங்கப் பணிமனையில் நடைபெற்ற மகாநாடு ஒன்றில் மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் கிளிநொச்சியில் அமைக்கப்பட இருக்கும் விவசாய அபிவிருத்தி ஆராய்ச்சி நிலையத்திற்கு 50 ஏக்கரும் விவசாய போதனு பீடத்திற்கு 150 ஏக்கரும் தேசிய இளைஞர் சேவை மன்றத்திற்கு 20 ஏக்கர் நிலமும் ஒதுக்கப்பட்டுள்ளன.

வரண்டபிரதேசமான யாழ் மாவட்டத்தில் செய்கை பண்ணக்கூடிய பயிர்வகைகளை ஆராய்ந்தறிவதற்கு கிளிநொச்சியில் அமையவிருக்கும் விவசாய அபிவிருத்தி ஆராய்ச்சி நிலையம் பெரும் உதவியாக இருக்குமென்று திரு யோகேந்திரா துரைசுவாமி மகாநாட்டில் எடுத்துக்கூறினர்.

இந்த நிலையத்திற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி 40 லட்சம் ரூபாவை உதவியாக வழங்குகிறதென்றும் கூறினர்.

[கோ-இ]

## "எமது அரசே பதவிக்கு வரும்"
### - எம். ஜி. ஆர்.

சென்னை, மே 10

எதிர்வரும் தமிழக சட்டசபைத் தேர்தலில் அ தி மு க. நிச்சயம் அறுதிப் பெரும்பான்மைப் பலத்தைப்பெறும் இவ்வாறு அ தி.மு.க. தலைவர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் சென்னையில் நிருபர்களிடம் கூறினர்.

மக்களால் தெரிவுசெய்யப்பட்ட அ. தி. மு. க. அரசை இந்திரா காங்கிரஸ் அரசு பதவிக்கு வந்ததும் கலைத்ததிலும் இந்திரா அரசின் விலைவாசிகள் குறையாததிலும் தமிழக மக்கள் விரக்தியடைந்துள்ளனர். இந்நிலையில் அ.தி.மு கவை மீண்டும் பதவியில் அமர்த்தவே அவர்கள் விரும்புகிறார்கள் என்றும் திரு. இராமச்சந்திரன் கூறினர்

அவர் மேலும் கூறியதாவது:-

தி. மு க.வும் இந்திரா காங்கிரசும் கூறியதுபோல் நாட்டில் கடந்த 3 மாதங்களில் விலைவாசிகள் குறையவில்லை

அ தி. மு க. அரசு மீண்டும் பதவிக்கு வரும்போது ஏற்கனவே எம்மால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மதுவிலக்கு அமுல்செய்யப்படும். [இ]

புத்தம் புதிய
ஹொண்டா
மோட்டார் சைக்கிள்களுக்கு
ஜுபிட்டர் ட்ரேடிங் கம்பனி
15, சென் பீட்டர்ஸ் லேன்
ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்
CD 200 — 19,000-00
BENLY SUPER — 12,500-00
CG 125 — 14·300-00
ஏனைய மொடல்களும் உடன் விற்பனைக்குண்டு.
இலங்கையின் ஏக விநியோகஸ்தர்கள்
ஸ்ரபோர்ட் மோட்டார் கம்பனி லிமிட்டெட்
5739

## காய்கறிவிதைகள் விநியோகம்

(உடுப்பிட்டி)

யாழ். மாவட்டத்தில் இம்மாதம் முதல் உப உணவு, காய்கறி விதைகள், சமநலச் சேவை நிலையங்கள் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளன. இதற்கான நடவடிக்கைகளை, யாழ் மாவட்ட சமநலச்சேவை உதவி ஆணையாளர் திரு. கே. பரமலிங்கம் மேற்கொண்டு வருகின்ருர்.

புலோலி, புத்தூர், கீரிமலை, அம்பன், நல்லூர், கிளிநொச்சி, முழங்காவில், இராமநாதபுரம், பூநகரி ஆகிய சமநலச் சேவை நிலையங்களுக்கு காய்கறி விதைகள் விவசாய அமைச்சினுல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

முன்னர் விவசாயப் போதனாசிரியர்கள் அலுவலகம் மூலமே உப உணவு, மரக்கறி விதைகள் விநியோகிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## யோகேந்திராவுக்கு மட்டுமே மெய்காப்பாளர்
### பண்டிதர் கேள்விக்கு சபையில் பதில்

(கொழும்பு)

இலங்கையில் உள்ள 24 அரசாங்க அதிபர்களில் யாழ் அரசாங்க அதிபர் திரு. யோகேந்திரா துரைசுவாமிக்கு மட்டுமே மெய்க்காப்பாளர் நியமிக்கப்பட்டுள்ளார். இதற்காக மாதாந்தம் 750 ரூபா செலவிடப்படுகிறது. சொந்தப் பாதுகாப்புக்கருதியே அவருக்கு இவ்வசதி அளிக்கப்பட்டுள்ளது.

பண்டிதர் திரு கா. பொ. இரத்தினத்தின் கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையில் பிரதி பாதுகாப்பு அமைச்சர் திரு. வெரப்பிட்டியா பாராளுமன்றத்தில் இதனை நேற்று முன்தினம் தெரிவித்தார். [ம]

## திருமலையில் சூறுவளி அவதான நிலையம்

(கொழும்பு)

சூறுவளி வருவதை முன்கூட்டியே அறியக்கூடிய "ராடர்" அவதான நிலையம் திருகோணமலையில் அமைக்கப்பட உள்ளது.

இலங்கையின் முதலாவது 'ராடர்' நிலையம் இதுவாகும்

78-ம் ஆண்டு ஏற்பட்ட சூறுவளியின் விளைவுகள்பற்றி ஆய்வுகள் நடத்திய நிபுணர்கள்குழு ஒன்று இத்தகைய 'ராடர்' நிலையத்தின் அவசியம் பற்றி வலியுறுத்தியதை அடுத்தே இது அமைக்கப்படுகிறது. (இ)

## லொறி கடத்தல் வழக்கில் எதிரிகள் விடுதலை

(யாழ்ப்பாணம்)

பளை லொறி கடத்தல் வழக்கில் சாட்சியமுரண்பாட்டால் எதிரிகள் மூவரும் விடுதலைசெய்யப்பட்டனர்.

இவ்வழக்கு யாழ். மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜனப் எம் ஜாமில் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் 1922 செப்டம்பர் 15ம் திகதி அல்லது அதற்கு முன் பளையில், வழக்குத்தொடுநருக்குத் தெரியாத வேறு இலருடன் சட்டவிரோதமான கூட்டமொன்றின் உறுப்பினர்களாக விளங்கியதாகவும் சூரியன் மறைந்து சூரியன் உதயமாகு முன், பொதுவீதியில்கந்தையா பூபாலசிங்கம் என்பவரின் உடமையிலிருந்த சி ஈ. 3391 இலக்க லொறியை கொள்ளையடித்ததாகவும், அம்பலவாணர் திருச்செந்திவேல், சிவசம்புநித்தியானந்தன் அல்லது நித்தி, கந்தையா முருகையா ஆகியோர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது

1-ம் எதிரி சார்பில் சட்டத்தரணி ஆர் ஈ. தம்பிரத்தினம் சட்டத்தரணி வி. செல்லத்தம்பியின் அனுசரணையுடன் ஆஜரானர். (ச)

### பளையில் 'மினி' கச்சேரி
## அரச அதிபர் மக்கள் குறைகளை நேரில் கேட்டறிந்தார்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள பல இடங்களில் நேற்று முன்தினம் காலை முதல் இரவு வரை நடமாடும் செயலகங்கள் நடைபெற்றன

இக்கச்சேரியில்கலந்துகொள்வதற்காக யாழ். செயலகத்தில் இருந்து யாழ். அரசாங்க அதிபரும், யாழ். மாவட்டச் செயலாளருமான திரு. யோகேந்திரா துரைசுவாமி, மேலதிக அரசாங்க அதிபர்கள் திருவாளர்கள் என். பி. ஜெகநாதன், எஸ். தர்மபாலன், எம். பஞ்சலிங்கம், உதவி அரசாங்க அதிபர்கள் திரு. என். சுப்பிரமணியம், திரு எம். குலநாயகம், உதவி உணவுக் கட்டுப்பாட்டாளர் திரு. ... சேவை உதவி அத்தியட்சகர் திரு. வெங்காதரன் ஆகியோர் உட்பட மற்றும் பல உயர் அதிகாரிகளும் சென்றனர்.

யாழ் அரசாங்க அதிபருக்கும் உயர் அதிகாரிகளுக்கும் சென்ற இடமெல்லாம் மாபெரும் வரவேற்பளிக்கப்பட்டது. ஒவ்வொரு இடத்திலும் தோரணங்கள் கட்டப்பட்டும் பூரணகும்பம் வைக்கப்பட்டுமிருந்தன. ஆங்காங்கே அரசாங்க அதிபருக்கு பொது மக்கள் மாலை அணிவித்தும் ஆராத்தி எடுத்தும் கௌரவித்தனர்.

ஆறு இடங்களில் நடைபெற்ற நடமாடும் செயலகங்களில் அவ்வப்பகுதி மக்களின் குறைகளை யாழ் அரச அதிபரும், அதிகாரிகளும் நேரில் கேட்டறிந்தனர். (கொ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## தேவை

புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள கற்பூரத் தொழிலகத்தில் வேலை பார்ப்பதற்கு (வில்லைகள் தயாரிப்பதற்கும், பைக் பண்ணுவதற்கும்) பெண் பிள்ளைகள் தேவை தொடர்பு கொள்ளவும். க.சர்வேஸ்வரன் S. T. S. இன்டஸ்ட்றீஸ், கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில் 5711

நாவற்குழி, யாழ்ப்பாணத்தில் கட்டிட வேலை செய்ய மேசன்மாரும், உதவியாட்களும் தேவை. தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்படும். தொடர்பு கொள்ளவும், K. ஐயாத்துரை, ஸ்ரீதேவி விலாஸ் மருதனமடம் அல்லது R. சிவலிங்கம் 60 பீச் ரோட், வில்லூன்றிப் பிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம். 5697

## தேவை

பழமைய கலை கைப்பணிப் பொருட்கள், மரம், சிடபி, சிரட்டை, தோல், உலோகம், ஆகியவற்றினால் செய்ததும், ஓவியங்களும், பட்டிக் துணிகளும் பழைய தளபாடங்களும் தேவை. கடித மூலம் தொடர்பு கொள்ளவும். பாலகிருஷ்ணன்ஸ், 692, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 5712

பலஇன புது சைக்கிள்கள் பூட்டுவதற்கு அனுபவமுள்ள ஆட்கள் தேவை. கூலியை பொருத்த அடிப்படையில் நேரில் பேசிக் கொள்ளலாம். அனுபவமுள்ளவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும். நியூரோன் எலக்ட்ரிகல்ஸ், 141, 143 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் 5707

## யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

(வரைவுள்ளது)

## கேள்வி விண்ணப்பம்

எமது சங்க மின்தறி நிலையத்தில் உற்பத்தி செய்யப்படும் (2000 மீற்றர்) கிறே பொலியஸ்ரர் சேட்டிங் கேள்விமூலம் விற்பனைக்குண்டு.

முடிவுத் திகதி:- 17-05-80

விண்ணப்பகாரர் வைப்புப் பணமாக ரூபா 250/- செலுத்துதல்வேண்டும்.

பொது முகாமையாளர்.

74/3, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்,
1980-05-09.

## தச்சு வேலையாட்கள் உடனடியாகத் தேவை

குறைந்தது 5 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவமுள்ளவர்களும் விசேஷமாக யன்னல், நிலை, கதவு அனுபவமுள்ளவர்களும். தளபாடவேலை, மேசை, கதிரை, சோக்கேஸ், டிறெஸிங் ரேபிள் போன்ற வேலைகளில் அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். திறமைக்கேற்ப தகுந்த சம்பளம் வழங்கப்படும். விண்ணப்பப் படிவத்துடன் கிராம சேவையாளரின் நற்சான்றிதழ் பத்திரமும் அனுப்புதல்வேண்டும்.

முகாமையாளர்,

## யூனிவேசல் றேட்ஸ் அன்ட் இன்டஸ்றீஸ்

பலாலி வீதி, உரும்பிராய்.

5729

குடும்பத்திலுள்ள அனைவருக்கும் தேவையானது!
ஒவ்வொரு இல்லங்களிலும்
இருக்கவேண்டியது!!
தேமஸ்!!! THERMOS சகல அளவுகளிலும்
இறக்குமதியாகியுள்ளது

## தேமஸ் பிளாஸ்குகள்

பிளாஸ்ரிக், தகர கொள்கலனுடையது

| | | |
|---|---|---|
| அரை பைந் (பிளாஸ்ரிக்) பிளாஸ்குகள் | ரூபா | 61-00 |
| ஒரு பைந் (பிளாஸ்ரிக்) பிளாஸ்குகள் | " | 72-00 |
| ஒரு பைந் (தகரம்) பிளாஸ்குகள் | " | 67-00 |
| இரண்டு பைந் (தகரம்) பிளாஸ்குகள் | " | 95-00 |
| பிளாஸ்ரிக் ஜக் அமைப்பு பிளாஸ்குகள் | " | 152-00 |
| குழந்தைகளுக்கான பிளாஸ்குகள் (போச்சி வைக்கக்கூடிய) | " | 74-00 |

நீடித்த பாவனை!
அதிக ஒளிச்சக்தியுடையது!!

## 'றெட்ஹாட்' பெற்றோல்மக்ஸ்

சில்லறை விலை ரூ. 375-00

மொத்தமாகவும் — சில்லறையாகவும் கிடைக்கும்
வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு

விரையுங்கள்!

## முகமதலி அப்துலலி

5, 7, பெரியகடை, யாழ்ப்பாணம்.
போன்: 515

## தேவை

யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல ஸ்தாபனமொன்றுக்கு தமிழிலும் ஆங்கிலத்திலும் கணக்கு எழுதுவதில நன்கு அனுபவமுடைய கணக்காளர் ஒருவர் உடன் தேவை. Book-Keeping, Accounts Exam சித்தியடைந்தவராகவும், மூன் அனுபவமுடையவராகவும், வயது 40-க்குட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும். சம்பளம் மாதம் ஒன்றிற்கு ரூபா 500/-ம், வருடமொன்றிற்கு ரூபா 25/- சம்பள உயர்வும் கொடுக்கப்படும். உடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 5692, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 5692

கண்ணாடித் தொழிற்சாலைக்கு அனுபவமுள்ள பவுளர் (Bubblers) ஹெல்பர் (Helpers) ,ளோவர் (Blowers) போன்றவர்களுக்கு வெற்றிடங்கள் இருக்கின்றன, அத்துடன் வேலை பழகுபவர்களும் (Trainees) எடுக்கப்படுவார்கள். உடன் நேரில் வரவும். தகுந்த சம்பளம் வழங்கப்படும். சேவி கிளாஸ் அன்ட் மெட்டல் வேக்ஸ் நீர்வேலி. 5723

உடைகளை பில்லுடன் சரிபார்த்துக் கொடுப்பதற்கும் (Delivery Celrk) உடைகளுக்கான பில் எழுதுவதற்கும் (Order Clerk) இருவர் தேவை. நற்சான்றிதழ்களுடன் 14-ம் திகதிவரை நேரிலோ, கடித மூலமோ விண்ணப்பிக்கலாம். சன்லைட் றைக்கிளீனேர்ஸ், மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 5731

யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல ஸ்தாபனமொன்றுக்கு நன்கு அனுபவமுள்ள கவுண்டர் கிளார்க் (Counter Clerks) உடன் தேவை. ஆங்கிலத்திலும், தமிழிலும் நன்கு தேர்ச்சியுடையவராகவும் A/L பரீட்சையில் நான்கு பாடம் சித்தியடைந்தவராகவும் வயது 35-க்குட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும். அனுபவத்திற்கேற்ற சம்பளம் கொடுக்கப்படும். விண்ணப்பிக்கவும் விளம்பர இல: 5690, C/O ஈழநாடு யாழ்ப்பாணம். 5690

## வாடகைக்கு

யாழ். மாநகரசபை எல்லைக்குள், சகல வசதிகளும் கொண்ட, வீடொன்று பல்கலைக்கழக விரிவுரையாளருக்கு தேவை. நல்ல வாடகை தரப்படும். விபரங்களுக்கு: விளம்பர இல. 5727 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 5727

நாவலர் கஸ்தூரி சந்தியில் (அப்பையா கடைச் சந்தி) இரண்டு கடைகள் வாடகைக்குண்டு 142, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 5728

Brownson

வாங்குங்கள்
பிரவுண்சன்
அரறூட்-மா

பிரவுண்சன் அரறூட் மா
அரச உணவு மருந்துச் சட்டத்தின்
கீழ் உத்தரவாதப் பதிவுபட்டது.

## விற்பனைக்கு

எம்மிடம் வொக்ஸ்வாகன் டிலிவரிவான் 33ஸ்ரீ2164 நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. விரும்புபவர்கள் கீழ்க்காணும் விலாசத்தில் காலை 10 மணி முதல் 1மணிவரை நேரில் பார்வையிடலாம். நியூரோன் எலக்ரிக்கல்ஸ், 141, 143, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 7016 (5691)

பாவித்த சோபா (Sofa) 3 மற்றும் 4 கட்டில், புதிய KDK Table Fan (Baby Model) விற்பனைக்குண்டு 90/4, [23/2] கல்லூரி வீதி, நீராவியடி 5713

புதிய நிலையிலுள்ள 24 ஸ்ரீ 4000 தொடரில் Isuzu லொறி விற்பனைக்குண்டு 48, பண்ணை (றிச் கோப்பி பார் முன்) நவீன சந்தை, யாழ்ப்பாணம். 5710

கோப்பாய் சந்திக்கருகாமையில் - பருத்தித்துறை வீதியில் 4 பரப்புக் காணியும், வீடும் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு ஸ்கொட், பொலிஸ்நிலைய அருகாமையில், கோப்பாய் 5717

## ஏல விற்பனை

புங்குடுதீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் கீழ்க்காணும் பொருட்கள் கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்குண்டு. ரூபா 50/- வைப்புப் பணமாகவும், விண்ணப்பப்படிவத்திற்கு ரூபா 5/-ம் செலுத்துதல்வேண்டும். கேள்விப்பத்திரங்கள் யாவும் 15-5-80-க்கு முன்பு அல்லது அன்று எமக்குக் கிடைக்கக்கூடியதாக இடதுபக்க மூலையில் "ஏல விற்பனைக்கான கேள்விப்பத்திரம்" எனக்குறிப்பிட்டு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

1. சுவிப்பிங் மாவு.
2. பாவிக்கப்பட்ட லொறி டயர், ரியூப்.
3. பாவிக்கப்பட்ட லொறி உதிரிப்பாகம்.

பொதுமுகாமையாளர்
புங்குடுதீவு.
5733

## காவலாளி தேவை

மானிப்பாய் பரிஷ் ப. நோ. கூ. சங்கத்திற்கு தற்காலிக காவலாளி தேவை. கீழ்வரும் தகைமையுடையோர் 20-5-80 ற்கு முன்பாக பதிவுத் தபால் மூலம் கீழ்க் குறிக்கப்பட்ட விலாசத்திற்கு விண்ணப்பம் செய்யவும். சம்பளம் கூட்டுறவு வேலை ஆணைக்குழுச் சட்டத்திற்கு அமைவாக வழங்கப்படும்.

தகைமை:

1. 8-ம் வகுப்பு சித்தியடைந்திருக்க வேண்டும்.
2. உடல் நலம் தேகாரோக்கியம் உள்ளவராய் இருத்தல் வேண்டும்.
3. அண்மையில் பெற்ற இரு நற்சான்றிதழ்கள்

சங்க எல்லைக்குட்பட்டவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

பொதுமுகாமையாளர்,
மானிப்பாய்
பரிஷ் ப. நோ. கூ. சங்கம்,
மானிப்பாய்.
5734

## 20 வருடங்களின் பின் இப்படி ஒரு மாற்றம்

(மகளூர்)

20 வருடங்களுக்குப் பின்னர் வளர்ப்பு மகளைக் காண வந்து 80வயது வயோதிபர் மகளைப் பார்க்காமலே மரணத்தை அணைத்துக் கொண்டார்.

அனுராதபுரத்தை வசிப்பிடமாகக் கொண்ட தம்பிமுத்து (வயது 80, எட்டயபுர ஆட்படி மரணமானவராவார்.

மரணமானவருக்கு பிள்ளைகள் இல்லை. அழகம்மா என்ற சிறுமியை வளர்த்து அவரை மணமுடித்து வைத்தார். அதன் பின்னர் வளர்ப்புமகள் எங்கிருக்கிறார் என்பது தெரியாமல் மகளைக் காண 10 வருடங்களாக வாழ்ந்து வந்தார். இறுதியில் மகளும், கணவனும் உயிலங்குளத்தில் இருப்பதை அறிந்து பஸ்ஸைப் பாக்க அனுராதபுரத்திலிருந்து பஸ்ஸில் வந்தார். முருங்கன் வரும் போது அவர் மயக்கமடைந்து விட்டார். இவர் உடனே முருங்கன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சிறிது நேரத்தில் மரணமானார். மரணவிசாரணை நடத்திய மரண விசாரணை அதிகாரி ஜனாப். எல். எம். கபீர் முகமது ஜே. பி. இயற்கை மரணம் என்று தீர்ப்பு வழங்கினார்.

## வகுப்பு

விஞ்ஞான முறைப்படி உடை வெட்டுதல், தயாரித்தல், சிகை அலங்காரம் (Hair Style) முதலியன அனுபவமிக்க மாஜி-சிங்கர் தையல் ஆசிரியையால் கற்பிக்கப்படும். விபரங்கட்கு: திருமதி பவளம் சிவசுப்பிரமணியம், 40, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். 5663

## விற்பனைக்கு

பயிர்ச் செய்கைக்கும், வீடு கட்டுவதற்கும் ஏற்ற 5 பரப்பு காணி கோண்டாவில் பண்டிப்போவுக்கு அருகாமையில் விற்பனைக்கு உண்டு. விபரங்கட்கு, K. கிருஷ்ணமூர்த்தி, பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு. 5725

## நன்றி நவிலல்

ஹற்றன் புனித ஜோசப் பொஸ்கோ, யாழ்ப்பாணம் புனித மரியாள் வித்தியாலயங்களின் ஆசிரியையும், சொலமன் ஏபிரகாமின் மனைவியும், சாப், றாத் என்பவர்களது தாயாரும், உடுப்பிட்டி கதிரவேலுவின் மகளும், அருளானந்தம், ஜீவானந்தம், தங்கராணி சண்முகம் ஆகியோரது சகோதரியும் இவ பெயசி செல்வராணியின் மரணச் சடங்குகளில் பங்குபற்றி பல்வேறு முறைகளில் உதவிய அனைவருக்கும், அடலவர்க்கும், உற்றார், உறவினர்க்கும் உளங்கனிந்த நன்றி. திருமதி சண்முகம் கட்டிச் சந்தி, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 5683

## தவறிவிட்டது

10-ந் திகதி சனிக்கிழமை காலை கே. கே. எஸ். வீதியில் வெள்ளை பிளாஸ்ரிக் கவருடன் விஸா காட், கடிதங்கள் தவறி விட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து தகவல் தரவும். எஸ். பக்கிரிசாமி, 230, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 5732

நம்பிக்கையான நவநாகரிக தங்க, வைர நகைகள் வேண்டுமா?

## பொ. அம்பலவாணர்

தங்க, வைர நகை வியாபாரம்

[illegible]
போன்: 7199.

யாழ்ப்பாணம்
தந்தி: வைரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புதிய பாதை

ரொம்ப கஷ்டப்பட்டுத் தான் பெடலை உழக்குகிறார் நஹீம் காக்கா.

சைக்கிள் நெளிந்து, வளைந்து வட்டம்போட்டு, அந்த சிறிய மேட்டைத்தாண்டி ஓடிக்கொண்டிருந்தது. சைக்கிள் பின் கரியரில் கட்டியிருந்த சன்லைட் பெட்டி பட்டாசு வெடிப்பதுபோல் 'சடபுட' வென எம்பி எம்பிக் குதித்தது. காற்று எதிர்த்திசையில் சுழன்றது. ஓடிவந்த தெருப் புழுதி மூஞ்சியில் அடித்தது. கண்களைப் புறங்கையால் கசக்கிவிட்டுக் கொண்டார் நஹீம் காக்கா!

கொக்குவில், கோண்டாவில், உரும்பராய் வடாக சுன்னாகம், மல்லாகம் இப்படிப் பல சுருக்கு வழிகளால் இவர் 'பழைய போத்தல், பித்தளை, இரும்பு இருக்கா...' என தொண்டை — நரம்பு புடைக்க கேட்டுக்கொண்டே போகிறார்.

கிட்டத்தட்ட பன்னிரண்டு வயதில் இத்தொழில்செய்ய ஆரம்பித்தார். இப்போது வயது இல்லையென்று போனாலும் அறுபதுக்கு சற்று முன்னப்பின்ன இருக்கலாம், இவரைக்கொண்டு உழைப்பவர்கள்-உழைப்பித்தவர்கள் பொருளாதார ரீதியாக மென்மேலும் முன்னேற்றமடைந்துள்ளனர். இவர், இவரைப் போன்றவர்கள்-இன்னும் எட்டாப் பழத்துக்கு கொட்டாவி விட்டகதைதான்.

சிட்டாகப் பறந்துவந்த சிறுவன் ஒருவன் ஏதோ வைத்ததை எடுக்கப்போவதுபோல் எழும்பி நின்று கவ்விய சைக்கிள் பெடலை உதைத்துக் கொண்டே அந்த வேகத்தில் திருப்பத்தில் மறைந்தும்விட்டான்.

முன்னம் இவரும் இப்படிப் பல விந்தைகள் காட்டி கண் மண் தெரியாமல் வேகமாக சைக்கிளில் தூரம் தொலைவுகளுக்குச் சென்று, பழைய சாமான் சட்டிகள் சேகரித்து விற்ற காலம் ஒன்றிருந்தது இப்போது வயதும் போய்விட்டது; உழைப்பும் விழுந்துவிட்டது

வீதி ஓரமாக இருந்த அந்த சிறிய தேநீர்க்கடையை மூடிவிடுமாப்போல் தன் கிளைகளை விரித்து நிழல் பரப்பிக்கொண்டிருந்த வேப்ப மரத்தில் சைக்கிளைச் சாத்திவிட்டு தலைமீது வெயிலுக்குப் பாதுகாப்பாய் போட்டிருந்த துண்டால் வியர்வையைத் துடைத்தார் நஹீம் காக்கா. பின் அதை சற்றுநேரம் விசிறியாக பயன்படுத்தினார். டீக் கடைக்குள் நுழைந்து ஓடர்கொடுத்து 'பிளேன் டீயை' வாங்கிக் குடித்தார். சட்டைப் பைக்குள் கையைவிட்டுத் துளாவி எடுத்த பீடியை கடையிலிருந்த குப்பி விளக்கில் சிகரட் பட்டையின் துணைகொண்டு சொக்கையில் குழிவிழ உறிஞ்சி இழுத்துப் பற்றவைத்துக் கொண்டார் சாக்கை உயர்த்தி சன்லைட் பெட்டிக்குள் பார்வையை ஓடவிட்ட நஹீம் காக்காவின் முகம் வேர் அறுந்த செடிபோல்வாடியது. 'தெல்லிப்பளைவரை பார்த்துவிட்டுத் திரும்புவோம்'—இப்படி தனக்குள் கூறிக்கொண்டவர் சைக்கிளில் தொங்கி ஏறினார்.

சின்ன வயதில் உழைக்கத் தொடங்கியதாலோ என்னவோ சுறுக்காவே கலியாணத்தையும் கட்டினார். பஞ்சத்தில் அடிபட்ட குடும்பம் ஒன்றில் - பன்னிரண்டோடு ஒன்று பதின்மூன்றாக பிறந்த மைமூனாவை அந்தக்காலத்தில் பெண்ணைப் பெற்றவர்களுக்கு ஏதோ ஒரு சிறிய தொகை 'மகர்' கொடுத்து கரம்பிடித்து வாழ்க்கைச் சவாலையும் ஏற்றார்.

ஏழைகளுக்குத்தான் எத்தனை சோதனைகள்! ஒருவேளை இப்படிப் பெற்றே ஏழையானார்களோ?

எட்டு ரூபாவுக்குமேல் இலாபம் கிடைக்கப்போவதும் இல்லை என இவர் அதிகமாக கவலைப்படவில்லை. 'என்ன மண்ணாங்கட்டி உழைப்பா?' என சலிப்படைந்து என்றும் ஒதுங்கியவரும் அல்ல. இன்று இல்லாவிட்டால்-நாளை-நாளையும் இல்லெனில் - நாளை மறுதினம் உழைக்கலாமென்ற நம்பிக்கை இவருக்கு உண்டு. ஆனால்

வேறுவிதமாக விளையாடியதில் ஹூசைனு இவருக்கு ஊனமடைவில் தெரியவந்தபோதிலும் மூசிக்காட்டாமல் மேற்படி விளையாட்டைப் பார்த்து வந்தார். கேட்கப்போய்-வாய் தடித்து- பின் வியாபாரத்துக்கு என்று வாங்கும் காசை மனுஷன் நிறுத்திவிட்டார். என்ன செய்வது?

கடைமுதலாளி அத்துடன் விட்டாரா? குட்டக் குட்டக் குனியும் இவருக்கு சற்று ஊன்றிக் குட்டிப்பார்த்தார். பொறுத்தது போதும் என விழித்தெழுந்தார் காக்கா. விஷயம் சந்திக்கு வந்தது. உதவி நிறுத்தப்பட்டது. கொத்திப்பாம்புபோல் இதையெல்லாம் அவதானித்துக் கொண்டிருந்த கனவான் ஒருவர் துடிதுடித்துப்போனார். இவர் மீது இரக்கப்பட்டு கைகொடுக்க முன் வந்தார் அதன்படி நாளொன்றுக்கு நூற்றுக்கு நான்கு ரூபா வீதம் 'ஸ்பெஷல் வட்டியாக தற்போது அவருக்கு செலுத்தி வருகிறார் சைக்கிள் கடையில் சைக்கிளை ஒப்படைத்துவிட்டு, அதற்கான நாள் வாடை நான்கு ரூபாவையும் கொடுத்துவிட்டு, கனவான் இருப்பிடத்தை நோக்கி நடந்தார் நஹீம் காக்கா.

கனவான் வீட்டுக்கதவைத் தட்டப்போனவர், சட்டென்று அன்று அவர் கூறிவிட்டிருந்ததை நினைவுகூர்ந்தார். 'நான் வட்டிக்குப் பணம் தருவதாக யாருக்கும் வாய் தவறியும் கூறிவிடாதீங்க— மருவாதன் பானம் மரியாதி என்னாகும்...' நஹீம் காக்கா என்ன நினைத்தாரோ. மெதுவாகச் சிரித்தார். வந்தகாடு தெரியாமல் அவரிடம் இருந்து வாங்கிய காசு உட்பட வட்டியாக நான்கு ரூபா மேலதிகமாகக் கொடுத்துவிட்டு, அன்றைய சவ் வீட்டுச்செலவுக்காக அவரிடமே இரண்டு ரூபா 'நாளைக்கு' ஏதோடு சேர்த்துத்தருவதாகக் கைமாத்தாகக் கேட்டு வாங்கிக் கொண்டு கழுத்தறுத்த கோழிபோல் தலையைத் தொங்கப்போட்டபடி வீட்டுக்கு நடையைக் கட்டினார்.

'எப்பிடி நஹீம் காக்கா இன்டைக்கி...?' சற்றுமுன் போகும்போது ஏற்பட்ட கஷ்டம் ஏதுவும் வரும்போது இல்லை கொழுத்தி எரிந்த வெயில் பக்கத்து வளவுகளில் நின்ற மரம் பட்டைகளில் தாவி வடிந்தன. எதிர்த்து நின்ற காற்றும் உதவியது. சைக்கிள் மலையிலிருந்து உருட்டிவிட்ட பந்துபோல் உருண்டோடிவந்தது. ஆனால் இவருக்குத்தான் போகும்போதிருந்த கொஞ்ச நஞ்ச உற்சாகமும் அடியோடி குன்றிவிட்டது. வேதனைகள் மனதை உறுத்தியது. காலைக்க இவ்வளவு தூரம் வெயில் குளிக்கப்போய் வந்தபோதிலும் சாமான்கள் போதியளவு சேரவில்லை. முக்கி மூக்கிப் பார்த்தாலும் சன்லைட் பெட்டிக்குள் கிடக்கும் பழைய போத்தல், பித்தளையை விற்று கஷ்டப்பட்டு உழைத்த இந்த எட்டு ரூபா ஆளுக்குப் பாதியாக பங்கு போவதை நினைக்கும்போது அனலில் இட்ட முந்திரிகைக்கொட்டை போல் பொங்கி எழுந்த பெருமூச்சு வெடித்துச் சிதறியது.

"பா..' ஒங்களைத்தான்! இப்படியே நெடுகலும் வெயிலில் நாடு காடு திரிஞ்சு அங்கினேக்கே ஒழைச்சுக்கொண்டு வார இம்மட்டுக் காசை இப்பிடி சைக்கிள் வாடையென்னும் வட்டிக் காசுமாக குடுக்கிறீங்களே. . நம்பிக்கையான யாரிட்டையாவது ஒரு சின்னச் சீட்டுப் பிடிச்சிங்கண்டா - கொஞ்சநாளைக்கு நாம கைலைக் கடிச்சுகிட்டு இடக்க, சீட்டும் விழுந்திடும். ஒருபழைய நாளைச் சைக்கிளை அல்லாட்டிப் போனா ஒங்கட யாவாரத்துக்காவது ஒதவும்தானே.'

நஹீம் காக்கா தன் மனைவியின் குரலுக்கு மதிப்பளித்து அவள் ஆலோசனைப்படி இரவுக்கு-ஒருவேளைச் சாப்பாட்டையும் தியாகப்பணிவயிற்றுக்கு வஞ்சகம்செய்து ஒரு மாதம் அளவில் சீட்டுக் காசை தவறாது அவ்வப்போது கட்டிக்கொண்டு வந்தனர். வழமைபோல் அன்றும் வெறும் வயிற்றுடன் சன்லைட் பெட்டியை சைக்கிள் கரியரில் கட்டிக்கொண்டு புறப்பட்டார்.

**எம். ஏ ஸி. பஷீர்**

பசியும் வெயிலுமாக இடையில் நல்ல வாட்டி எடுத்ததின் விளைவால் - நிலை தவறிப் போனார் அவர். நெஞ்சடிபட குட்டை மேட்டில் சறுக்கி விழுந்தார் நான்கு ஐந்து நாட்கள் வியாபாரத்துக்குப் போக நினைத்துக்கூடப் பார்க்கமுடியாதவாறு படுத்த படுக்கையானார்.

சீட்டுக்காசை உரிய தவணையில் செலுத்தமுடியாமல் திண்டாடினார். பின் பண்டாடினார். உழைக்கத் தெரியாத ஒங்களுக்கு என்ன இழவுக்குத்தான் சீட்டும், கீட்டும்' வீடுவந்து ஏசிவிட்டு சீட்டுக்காரர் போய்விட்டார்! அன்றுதொட்டு இன்றுவரை சீட்டைப்பற்றி கவலைகூட காண - [illegible] பதிகள். சேமிப்பதற்கு வேறு வழிகளை நாடியும் பயன் பூஜ்யம்தான்.

"பழைய போத்தல், பித்தளை இரும்பு வாங்கலாம் விற்கலாம்' இப்படி 'போர்ட்' பலகையைத் தாங்கிநின்ற ராம்ப் பாண்டிக் கடை ஒன்றின் வாசலில் சைக்கிளை நிறுத்தினார்.

'என்ன நஹீம் காக்கா? ஆக... இவ்வளவு தானா?' கேட்டுவிட்டு நக்கலாகச் சிரித்தார், அந்தக் கடைக்காரர். அவருக்கு இவர் மீது பழைய கறள் ஆரம்பத்தில் அவரிடம் இருந்துவந்தது சடன் வாங்கிக்கொண்டு [illegible] போய் வந்துகொண்டிருந்தார். அதற்காக அவர் வட்டி எதுவும் வாங்கியதும் இல்லை! ஆனால்

தாக ஏதோ வைத்ததை எடுக்கப்போவதுபோல் கவடுகிழிய சைக்கிளில் போன அந்த சிறுவன் அவர் முன் வந்து நின்றான். 'இன்டைக்கி நான் காங்கேசன்துறை வரைக்கும் போய்விட்டு வந்தபோதிலும் பத்து ரூபாதான் கெடச்சது... சைக்கிள் வாடை நாலு ரூபா கொடுத்தேன். வட்டிக்காசப் நாலு ரூபா போக மிச்சம் எனக்கு ரெண்டு ரூபாதான் கெடச்சி- 'காச்சட்டைப்பைக்குள் கையை ஓட்டி அந்த ரெண்டு ரூபாவை வெளியே இழுத்தெடுத்து 'இங்கப் பாருங்க' என்று காண்பித்து கவலையுடன் கூறினான் பையன்.

அவன் சிறுவனாக இருந்த போதிலும், ஒரு குடும்பப் பொறுப்பைச் சுமந்து நிற்பவன். நித்திய நோயாளியான தாய், உழைத்ததைச் செல்லாம் குஞ்சாவுக்காகச் செலவுசெய்துவிட்டு, தற்போது நடக்கக்கூட முடியாமல் ஒவ்வொரு திண்ணையாய் குந்தி எழும்பும் தகப்பன், தம்பி, தங்கை எல்லாமாக ஆறு உருப்படிகளுக்கும் அவன்தான் உழைக்கவேண்டும். அதனால் படிப்பும் பாழானது

பாட்டைத்தலை, அழுக்கேறி கிழிந்து தொங்கும் காற்சட்டையும் சட்டையுமாக நின்ற தன் மகனைப் போன்ற அந்தச் சிறுவனைப் பார்க்க வேதனையாக இருந்தது நஹீம் காக்காவுக்கு

'தம்பி! நான் ஒனக்கு ஒரு யோசனை சொல்கிறேன். கவனமாகக்கேள்—ஒரு தகர உண்டியலில் அவ்வப்போது கிடைக்கி

(9-ம் பக்கம் பார்க்க)

# பிரிவுகள்!

மாலி

'சங்கீத கலாநிதி பாலக்காடு மணி ஓய்வு பெறுகிறார்'- என்று, சென்னையிலிருந்து வெளியாகும் 'தினமணி' ஏடு செய்தி வெளியிட்டிருக்கிறது

"எந்தவொரு அரங்கிலும், வானொலியிலும், பொழுது போக்கு இடங்களிலும் கச்சேரி செய்வதற்கான அழைப்பை இனிமேல் ஏற்கப்போவதில்லை' என்று அவர் புத்தாண்டு தினத்தில் 'பிரதிக்ஞை' செய்திருக்கிறார்.

'அபிநவ நந்தி' என்று கொண்டாடப்படும் அந்த மிருதங்க மேதையினுடைய இந்த அறிவிப்பு, கருநாடக சங்கீத உலகில் ஈடுபாடுடைய எவருக்குத்தான் திகைப்பையும், வருத்தத்தையும் உண்டு பண்ணாது?

பாலக்காடு மணி ஐயரின் இந்த முடிவு பற்றி செம்மங்குடி தெரிவித்திருக்கும் கருத்தே முழு சங்கீத உலகினதும் குரலாக ஒலிக்கிறது

"'பாலக்காடு மணி கச்சேரிகளிலிருந்து ஓய்வு பெறுவதென செய்துள்ள முடிவு கர்நாடக இசை உலகுக்கும் ஆயிரக்கணக்கான இசை அன்பர்களுக்கும் பெரும் ஏமாற்றம் அளிப்பதாகும். அவரின் புகழ் உச்சத்தில் இருக்கையில் அவர் ஓய்வு பெற விரும்புகிறார். இருந்தாலும், அவரது தீர்மானம் வருத்தமளிப்பதாக அமைந்திருக்கிறது ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக எனது கச்சேரிகளுக்கு வாசித்திருக்கிறார் அவர் உடன் வாசிப்பதை என்றைக்கும் பெருமையுடன் போற்றி வருபவன் நான்''- என்று அந்த முதிய இசை மேதை "சங்கீத கலாநிதி', டாக்டர் செம்மங்குடி ஸ்ரீநிவாச ஐயர் தெரிவித்திருக்கிறார்.

கடந்த அரை நூற்றாண்டுக் காலமாக கருநாடக இசை அரங்குகளில் பிரகாசித்துக் கொண்டிருக்கும் பாலக்காடு டி. எஸ். மணி ஐயர் கச்சேரிகளிலிருந்து ஓய்வு பெறுகின்ற தன்னுடைய தீர்மானம் மாற்றமுடியாதது என்று தெரிவித்துள்ள அதே வேளை, தாம் இப்போது பணியாற்றி வரும் ஆந்திர பிரதேசத்திலுள்ள ரிஷி பள்ளத்தாக்கு கல்லூரியில் தம்முடைய வாழ்நாள் முழுமையும் பணிபுரியப் போவதாகவும் தெரிவித்திருக்கிறார்.

டாக்டர் அன்னிபெஸன்ட் ஆரம்பித்த கலாஷேத்திரத்தின் ஒரு பகுதி இக்கல்லூரி. இங்குதான் 'சங்கீத கலாநிதி' திருமதி எம். எல். வசந்தகுமாரி இசைப் பேராசிரியையாக இருக்கிறார்.

- மணி ஐயர் தம்முடைய ஓய்வு பற்றி அறிவித்த சமயம் எம் எல் வியும் அருகில் இருந்தாராம்.

●

1980 ஜனவரி 12-ந் தேதி பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் குமாரி கமலாவினதும் குழுவினரதும் நடன நிகழ்ச்சி.

இந்தியாவிலிருந்தே பக்கவாத்தியங்களும் (பாட்டு, மிருதங்கம்) வந்திருந்தன

கமலாவுக்கு வழக்கமாகவே பாடும் ராஜேஸ்வரிதான் வந்திருக்கிறார் என்பது தெரிந்ததும், கமலாவின் ஆடலோடு அந்த ராஜேஸ்வரியின் பாடலையும் கேட்கப்போகிறோமென்ற இரட்டிப்பு ஆவல்!

நிகழ்ச்சி ஆரம்பமாயிற்று; சுப்புடு சொல்லியிருந்த - எப்போதுமே நினைவிலிருக்கும் அந்த வார்த்தைகள்தான் மனதில் ரீங்காரமிட்டுக்கொண்டிருந்தன.

'"நான் முன்பே சொல்லியிருக்கிறேன், நல்ல தேர்ச்சி பெற்ற நடனமணியாக இருந்தாலொழிய, இந்தப் பொல்லாத ராஜேஸ்வரியை வைத்துக்கொண்டு ஆடக்கூடாது. அவர் சாரீரத்திலிருந்து எழும் நாத வடிவங்கள் நம்மை அவர் பால் இழுக்கின்றன; நாட்டியம் மறைந்து [illegible] கரைந்துவிடுகிறது நல்ல நாத [illegible] நீக் கச்சேரி [illegible]

ஞானம் படைத்த இப்பெண்மணியை சபாக்காரர்கள் ஏன் பயன்படுத்தவில்லை என்றுதான் புரியவில்லை ''

- 1977 ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் சுப்புடு எழுதியவை இவை.

அன்றைய நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்துக் கொண்டிருந்த இராஜாங்க அமைச்சர் திரு. ஆனந்த திஸ்ஸ த அல்விஸ், "இந்த மேடையில் ஒரு கந்தர்வ கீதத்தை நான் கேட்டுக் கொண்டிருந்தேன்; உண்மைக் காலத்தில் இப்படியொரு பாடலை நான் கேட்டதேயில்லை '' என்று அர்த்தபூர்வமாகவே கூறினார்.

- அதன் வெளிப்பாடாக தனக்கு அணிவிக்கப்பட்ட அந்த மல்லிகைப் பூ மாலையை, மேடையின் வலது கோடியில் அடக்கத்தோடு அமர்ந்திருந்த அந்தப் பெண் ராஜேஸ்வரியின் கரங்களில் சொரிந்துவிட்டுச் சென்றார், அல்விஸ்.

அல்விஸ்; அவர் ஒரு நுணுக்கமான ரசிகர்.

பாட்டோடு நட்டுவாங்கத்தையுமல்லவா ராஜேஸ்வரிகனகச்சிதமாக செய்தார்!

- அதுவும் பரதநாட்டியத்துக்கு மாத்திரமல்ல, அந்தக் குழுவில் குச்சுப்பிடி நடனமாடிய அநுபமா மோகனுக்குக்கூட நட்டுவாங்கம் செய்தாரே!

மறுநாள் காலை அவரை சந்தித்தேன்

தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரியில், நம்முடைய ஜெகதாம்பிகை பரமநாதனோடு கூடப் படித்தவர் ராஜேஸ்வரி இப்போது அங்கேயே சங்கீத விரிவுரையாளராகவுமிருக்கிறார்.

''நாட்டியத்துக்குப் பின்னணி பாடுவதை மெல்ல, மெல்ல - விரைவாகவே - பூரணமாக நிறுத்திவிடப் போகிறேன்'' என்றார் அவர்!

மேடைக் கச்சேரிகளிலேயே முழுமையாக ஈடுபடப்போகிறாராம். சுப்புடு எழுதிய மறு ஆண்டே அனைத்து சபாக்களும் தனக்கு இடமளிக்க ஆரம்பித்துவிட்டன என்றும் கூறினார்.

●

நாட்டிய அரங்கில் இருந்து [illegible]

உணர்வுகள், இசை அரங்கில் இருந்து பாலக்காடு மணியின் பிரிவுச் செய்தியைப் பார்த்த வேளையிலும் எழுந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நடிகை ஷோபாவின் மரண வீட்டில் நடந்தது

# ரஜனிகாந்த் கண்ணீர் விட்டு கதறி அழுதார்!

## பாலு மகேந்திராவை அடிக்க மாமன் ஓடிவந்தார்

பிரபல தமிழ் நடிகையும், 'பசி' என்ற படத்தின் மூலம் இந்தியாவிலேயே சிறந்த நடிகை என்ற ஜனாதிபதியின் தங்கப்பதக்கத்தைப் பெற்றவருமான 'ஷோபா' மர்மமான முறையில் மரணமடைந்துள்ளார்.

பிரபல ஒளிப்பதிவாளரும் இலங்கையைச் சேர்ந்தவருமான பாலு மகேந்திராவை 3 மாதங்களுக்கு முன்புதான் பெற்றோரின் பெரும் எதிர்ப்புக்கிடையில் திருமணம் செய்து கொண்டு மக்களிடையே பரபரப்பை ஏற்படுத்தினார். இப்போது மரணத்திலும் பரபரப்பு ஏற்படுத்திவிட்டார்.

இருவரும் சென்னையில் அருணாநிதிநகர் என்ற இடத்தில புதிய பங்களா ஒன்றில் வசித்து வந்தனர். கடந்த 1-ம் திகதி பிற்பகல் 2 மணிக்கு (வியாழன்) பாலு மகேந்திரா பொலிஸ் நிலையம் வந்து ஷோபா தற்கொலை செய்து கொண்டார், எனக்குப் பாதுகாப்பு வேண்டுமென்று கேட்டார். உடனே பொலிசார் ஷோபா வீட்டுக்கு விரைந்து சென்றனர்.

ஷோபா அவரது படுக்கை அறையில் தரையில் பிணமாகக் கிடந்தார். பஞ்சாப் ரவிக்கையும் மஞ்சள் பாவாடையும் அணிந்திருந்தார் மின்சார விசிறியில் புடவை கட்டப்பட்டுத் தொங்கியது புடவையின் ஒரு பகுதி அறுந்து கீழே கிடந்தது. கழுத்தில் சிறிதளவு புடவைத்துணிகள் சுற்றிக்கொண்டிருந்தன

வீட்டில் ஷோபாவின் தாயாரும் நடிகையுமான பிரேமா கதறிஅழுதுகொண்டிருந்தார் தந்தை மேனனும் கண்ணீர் வடித்துக்கொண்டிருந்தார். அறையில் இருந்த கண்ணாடிகளும் படங்களும் உடைந்து சிதறி இருந்தன. (ஷோபா இறந்து கிடந்ததைப் பார்த்ததும் அவரது தாய்மாமன் சோகத்தாலும் கோபத்தாலும் உணர்ச்சி வசப்பட்டு அவைகளை உடைத்ததாகப் பொலிசார் தெரிவித்தனர்.)

### ஷோபாவின் தந்தை மேனன் அளித்த வாக்குமூலம்

ஷோபா எனது 2-வது மனைவி பிரேமாவின் மகள். பாலு மகேந்திராவை திருமணம் செய்துகொண்டு எங்களுடன் கோபித்துக் கொண்டு தனியாக வசித்து வந்தாள். அதிலிருந்து நான் அவளைப் பார்க்கவில்லை. இன்று மே மாதம் முதல் திகதி விடுமுறையாதலால் பார்த்துவிட்டுப் போகலாமென்று வந்தேன்.

நான் இங்கு வந்தபோது வீட்டில் வேலைக்காரப் பெண்கள் இருந்தனர். ஷோபா எங்கே என்று கேட்டேன். அறையில் தூங்குவதாகக் கூறினர். அறைக் கதவைத் தட்டிவிட்டு உட்கார்ந்திருந்தேன். ஷோபா வரவில்லை.

### வேலைக்காரி கூறியது

என்ன விடயம்? வீட்டில் ஏதும் தகராறு நடந்ததா? என்று கேட்டேன். தகராறு ஒன்றுமில்லை. நேற்றிரவு பாலு மகேந்திராவுக்கும், ஷோபாவுக்கும் இலேசான வாக்குவாதம் நடந்தது என்று வேலைக்காரி கூறினார்.

### வி. ரவிச்சந்திரன்

இதற்கிடையில் பாலு மகேந்திரா வந்தார். இன்னும் ஷோபா வரவில்லையே என்றேன். உடனே ஜன்னல் வழியாக உள்ளே பார்த்தார். ஷோபா கீழே விழுந்துகிடப்பதாகக் கூறினார். அறைக் கதவை உடைத்தோம் உள்ளே சென்று பார்த்தபோது ஷோபா செத்துக் கிடந்தாள். உயரத்தில் சேலை கட்டப்பட்டுத் தொங்கியது தூக்குப் போட்ட அடையாளங்கள் கழுத்தில் இருந்தன. உடனே பாலு மகேந்திரா பொலிசுக்குத் தெரிவிக்க ஓடினார் என்று ஷோபாவின் தந்தை கூறினார். பொலிசிடம் பேசும்போதே அவர் சோக மிகுதியால் மயக்கம் அடைந்தார். அவருக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது. தனது மரணத்திற்கு தானே காரணம் என்று ஷோபா எழுதிவைத்திருந்த கடிதம் மறுநாள் பொலிசாரால் கண்டு பிடிக்கப்பட்டது.

வீடு முழுவதையும் பொலிசார் சோதனையிட்டனர். அப்போது இயர்களுடன் சினிமா டைரக்டர் துரையும், இசை அமைப்பாளர் சங்கர் கணேசும் இருந்தனர்.

### பொலிஸ் பாதுகாப்பு

ஷோபாவின் குடும்பத்தினர் தாக்கக்கூடும் என்று பாலு மகேந்திரா அஞ்சியதால் அவருக்குப் பொலிஸ் பாதுகாப்பு கொடுக்கப்பட்டது. பிரேத விசாரணை நடக்கும் போது பாலு மகேந்திராவை ஷோபாவின் வீட்டுக்கு அழைத்துவந்தனர். பொலிஸ் வண்டியிலேயே ஒரு இன்ஸ்பெக்டரின் கையை இறுகப் பற்றிக் கொண்டு சோகமாக வந்தார். அவரிடமும் தனியாக விசாரணை நடந்தது

கடந்த புதன்கிழமை இரவு இரண்டு பேருக்கும் சிறு மனத்தாங்கல் ஏற்பட்டதாயும், முதல் மனைவி வீட்டுக்கு பாலு மகேந்திரா அடிக்கடி செல்வதாயும் தன்னைப் பார்க்க வருவது இல்லை என்று பாலுவிடம் ஷோபா சத்தமிட்டாராம். கணவனிடம் கோபமடைந்த ஷோபா படுக்கை அறைக்குச் சென்றுவிட்டதாயும் பாலு மகேந்திரா பொலிசாரிடம் தெரிவித்தார்.

### அடிக்க ஓடிவந்தார்

பாலு மகேந்திராவை பொலிசார் அழைத்துவந்தபோது ஷோபாவின் மாமா ஆத்திரமடைந்து அடிக்க ஓடிவந்தார் உடனே பொலிசார் அவரை ஒரு காரில் ஏற்றி அப்புறப்படுத்தினர்.

ஷோபா குடியிருந்த வீடு ஒரு பாங்க் அதிகாரிக்குச் சொந்தமானது. கடந்த ஜனவரியில்தான் கட்டப்பட்டது. கடந்த ஏப்ரல் 2-ம் திகதிதான் ஷோபா அதில் குடியேறினார். பாலு மகேந்திராவை திருமணம் செய்துகொண்டதாகக் கடந்த ஜனவரி 22-ந் திகதி அறிவித்தார். அதிலிருந்து சரியாக 100-வது நாளில் அவர் இறந்துவிட்டார்.

ஷோபாவின் மரணச்செய்தி சென்னை நகரில் பரவியதும் அவர் வீட்டு முன்பு பக்கம் பத்தாயிரத்துக்கும் அதிகமானோர் கூடிவிட்டனர். ஷோபாவின் உடலைப் பார்க்க அவர்கள் முண்டியடித்துக்கொண்டு புகுந்தனர். எனவே மூன்று லொறி நிறைய விசேட ஆயுதப் பொலிசார் வந்து கூட்டத்தைக் கலைத்தனர். கூட்டத்தில் பெண்களும் அதிகம் இருந்தனர்.

### நடிகர்கள் வந்தனர்

ஷோபாவின் மரணச்செய்தி கிடைத்ததும் நடிகர், நடிகையர் திரண்டு சென்றனர் ரஜினிகாந்த் கறுப்புடை அணிந்து மாலையுடன்வந்தார் அவருடன் டைரக்டர் மகேந்திரனும் வந்தனர். ஷோபாவின் உடலைப்

(7-ம் பக்கம் பார்க்க)

பல வருடங்களாக, யாழ்ப்பாண மக்களின் அபிமானத்தைப் பெற்ற

கதிர் ஹாட்வெயர்ஸ் நிறுவனத்தில்

எது வேண்டுமோ அத்தனையும் இலாப விலையில் கிடைக்கிறது

'டியுகோ'-'டியுலக்ஸ்'-'பென்றலைற்'

பெயின்ற் வகைகள்

கட்டிட தேவைக்குரிய சகல இரும்புக்கம்பிகள், பட்டங்கள் கேடர்கள், பூட்டுப் பிணைச்சல்கள், தெறகொட்டா சிவப்பு-வெள்ளை சிமெந்து வகைகள், கறுப்பு-சிவப்பு பவுடர்கள் சுகாதார உபகரணங்கள், கல்வனைஸ்ட் பைப்புக்கள், அல்க்கத்தீன் குழாய்கள், பி.வி.சி. பைப்புக்கள், நெளித்தகடுகள், ஆணிகள், ஸ்குறூக்கள், மாபிள்க்கற்கள் அத்தனையும்

பெறுவதற்குகந்த நியாய விலை ஸ்தாபனம்

★ கதிர் ஹாட்வெயர்ஸ் ★

(TILLYS GROUP)

மொம்ஸாக் கட்டிடம், 11|1-2, ஸ்ரான்லி வீதி - யாழ்ப்பாணம். தொலைபேசி: 7130 தந்தி: 'கதிர்'

தலைமையகம்:

TILLYS HARDWARE STORES

424, SRI SANGARAJA MAWATTA — COLOMBO-10

Phone 27439-35420-38188 Telegrams-"TILLYS"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரங்கும் அவையும்

கவிப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை

## ஒரு ரசிகன் நாடகம் பார்க்கிறான்!

கா(ர்)ஷியா லோ(ர்)க்கா 1934-ல் எழுதிய யே(ர்)மா என்ற துன்பியல் நாடகத்தைத் தழுவி கலாபதி சிங்களத்தில் எழுதிய கதையை அடியொற்றி மொழிபெயர்ப்பாய் எழுந்த நாடகமே "கடலின் குழந்தைகள்" ஆகும். வீரசிங்கம் மண்டபத்தில் அண்மையில் மேடையிடப்பட்ட இந்நாடகம் அவையோர் மத்தியில் சலசலப்பை ஏற்படுத்தியதாம். குடும்ப எதிர்ப்பு, சமூக எதிர்ப்பு கோஷத்தை இந்நாடகம் கூட்டுகிறதே! சமூகத்துக்குப் பயந்து பயந்து ஒளித்து மறைத்துச் செய்பவற்றை வெளிப்படையாக, வெட்கத்தை விட்டுச் செய்யும்படி தூண்டுவதா? இதனை மேடையிடும் போதனைத் தமிழ்ச் சமூகத்தின் நோக்கம் என்றெல்லாம் பல சிந்தனை அலைகள் அவையிலே மிதந்ததாம். அவ்வளவு தூரம் நெஞ்சைக் குடைந்த விஷயம் யாது? பிள்ளையற்ற காரணத்தால் மலடி; என்று இகழப்பட்ட மாது ஒருத்தி தன்னில் நாட்டமற்றிருக்கும் கணவனுடைய தம்பி மூலம் மகப்பேறு எய்துகிறாள். தமையன் உகை அபவாதத்துக்கு அஞ்சித் தம்பியை விரட்டுகிறான். மகவையும் கொல்கிறான். இதுவே கதை அமைப்பு;

### மூலமும் தழுவலும்

ஸ்பானிய மூல ஆசிரியர் கத்தோலிக்க சூழ்நிலையில் பெண் ஒரே கணவனை மட்டுமே சேரலாம் என்ற கருத்துக்குப் பாதகமில்லாமல் கதையைக் கொண்டு செல்கிறார். அவளது பாலியத் தோழனில் கணவனுக்கு சந்தேகம் எழச் செய்கிறார். முதியவள் ஒருத்தியின் போதனைப்படி தம்பதிகள் புனித தல யாத்திரையை மேற்கொள்கிறார்கள். துர்ப்போதனைக்கு இடம் கொடாத பெண்ணின் கற்பை கணவன் அறிகிறான். ஆனால் மகப்பேற்றில் இச்சையில்லாத கணவனின் உடற் பசிக்கு இடம் கொடாத பெண்ணின் நியாயமான கோபம் எல்லை மீறிக் கணவனின் கழுத்தைத் திருகி விடுகிறது. தழுவலாசிரியர் கலாபதி, மலடிப் பட்டத்தை விலக்க விரும்பும் பெண்ணுக்கு அருகே தமையனுக்கு உறுதுணையாய் இருக்கும் தம்பி ஒருவனை சிருஷ்டித்துள்ளார். அவள் மனம் கோணுவதற்கு ஒரு அதீத காரணம் ஒன்றையும் கண்டு பிடித்துப் புகுத்தியிருக்கிறார். தன் சாதகத்தில் தோஷம் இருப்பதை உணர்ந்து தமையன் தம்பியின் சாதகத்தைக் காட்டி விவாகப் பொருத்தம் கண்டு அவளை மணக்கிறான். இதனை அறிய நேரிட்ட பெண்ணுக்கு (கிரகங்களால்) வானத்தில் நிச்சயிக்கப்பட்ட தன் விவாகத்தை வையகத்தில் மாற்றியவன் மீது பற்று தேய்கிறது. 'கலை' ஆடி ஒருத்தி இவளுக்கு மகப்பேறு உண்டு என்று கூறியதும், இவள் எப்படியாயினும் ஒரு பிள்ளையைப் பெற்றுக் கொள்வது என முடிவு கட்டத் தூண்டுகிறது. கண்டல் போட ஒரு பெண் பாத்திரம் - அவள் வாயால் ஊரார் குறை கூறுதல் - தம்பி வீட்டை விட்டு வெளியேறுதல் - அவன் பிரிவு தாங்கமுடியாத நிலையில் அவளும் வீட்டைத் துறக்க முடிவு செய்தல் நிகழ்கின்றன. கணவனது சுயநலத்தன்மை தூண்டிய பொறாமைப் போறி அணையாத் தீயாகிறது. குழந்தையைக் கொல்கிறான். வெளியேறப் பெட்டகத்துடன் வந்தவன் எந்த ஒரு கவிதையைத் தான் எல்லாவற்றையும் துறந்தானோ அந்தக் கவி தட்டிப் பறிக்கப்பட்டதைக் காண்கிறான். மனிதன் தான் இச்சித்த பொருளை எப்படியாயினும் அடைய முயல்கிறான்; ஆனால் அதை அனுபவிக்க முடியாமல் தடை ஏற்பட்டு விடுகிறது. "எழுதிச் செல்லும் விதியின் கை எழுதி எழுதி மேற் செல்லும்" என்ற பாடத்தை சபையோர் படிக்க வேண்டுமானால் இதைவிட வேறு விதமாக முடித்திருக்க இயலாது.

### ரசிகனின் சிந்தனைச் சூழல்

ஒரு பாடத்தை உடன்பாட்டு ரீதியாகவும் எதிர்மறை ரீதியாகவும் படிப்பிக்கலாம். எந்த முறை சரியானது? இலட்சிய பாத்திரத்தைப் படைத்து தன் ஆசைகளைத் தியாகத் தீயில் போசுக்கிப் புடமிட்ட பொன்னாக மிளிர்வதாகக் காட்டுவது ஒரு முறை; இலட்சிய வாதியின் முறை. மக்களினத்தில் ஒரு பகுதியாருக்கு அந்த முறை நன்மை பயக்கும். ஆனால் மற்றொருவகையாருக்கு எதிர்மறை முகமாகப் படிப்பிப்பதே ஏற்றதாயிருக்கும். 'அடித்தடித்து அக்காரம் தீற்றுவது போல, சத்திர சிகிச்சை செய்யும் வைத்தியன் போல துன்பியல் நாடகம் பார்ப்போருடைய உள்ளத்தைத் தூய்மை செய்யும். வைத்திய சாலையில் மருந்து கொடுக்கும் அறை போலவே, ரண சிகிச்சை அறையும் முக்கியமானது. ஒன்று மற்றொன்றுக்கு குறை நிரப்பி ஒன்றைப் பாராட்டுவதும் மற்றதைக் குறை சொல்வதும் பொருந்தாது. "கண்ணுடையவர்கள் பார்க்கக் கடவர்; காதுடையவர்கள் கேட்கக் கடவர்; அங்கவீனர்கள் மண்டபத்திலிருந்த நாற்காலிகளைப் போல் சடமாக இருந்து விட்டு எழுந்து செல்லக் கடவர். கலாமதிப்புடைய நாடகமாக 'கடலின் குழந்தைகளை' சுவைத்த ரசிகன் காவலூர் இலக்கிய வட்டத் தலைவர் ஆ. சபாரத்தினம் எழுதிய மடலின் சில அம்சங்களே இங்கே தரப்பட்டுள்ளவை.

### 'குருதிமலை' அறிமுக விழாவில்......

யாழ். இலக்கிய வட்டம் வீரசிங்கம் மண்டபத்தில் தி. ஞானசேகரனின் 'குருதிமலை' என்ற நூலுக்கு குறமகள் தலைமையில் அறிமுக விழா எடுத்தது. செங்கையாழியான் பேசுகையில், நூலாசிரியர் மலையக எழுத்தாளர்களை விட மலையகப் பகைப் புலத்தை நன்கு புரிந்து கொண்டுள்ளாரெனவும், தான் ஊகித்த முடிவின்றி வேறு முடிவுக்கு ஆசிரியர் நகர்த்தியதே அவரது வெற்றியென்றும், படிப்படியாக உணர்வுகள் வளர்த்தப்பட்டு இயல்பாக வெடிக்கின்ற யதார்த்த ரீதியான வளர்ச்சி காணப்படுகிறதெனவும் குறிப்பிட்டார், நாவலை வாசித்த போது ஒரு திருப்தி ஏற்பட்டது! இது தான் எழுத்தாளனுக்கு வெற்றி" என்றார். ஜீவா பேசுகையில், "ஞானசேகரன் தமிழனாக நின்று கதையை எழுதாமல், மனிதனாக நின்று எழுதுகிறார் என்றார். பிரச்சினைகளை, காரண காரியங்களை, பாத்திரங்களின் பிரதிபலிப்புகளை அழகாக எழுதிய ஆசிரியர், கூட்டுச் சக்தியின் தத்துவம் பற்றி, தொழிற் சங்கம் பற்றி குறிப்பிடவில்லை. ஒரு தனி மனிதனுல் சமுதாயத்தை மாற்றியமைக்க முடியாது. ஒரு தொழிற் சங்கம் தேவை" எனவும் குறிப்பிட்டார். இவை சிறு குறைபாடுகளே அன்றி இந்நூல் படிக்க வேண்டிய நல்ல படைப்பு என்றார் ஞானசேகரன் தனது பதிலில், இந்நாவலை ஒரு சரித்திர மாணவனுக்கு சரியான சரித்திர தத்துவ தரிசனத்தைக் கொடுக்க வேண்டும் என்ற நோக்குடன் எழுதினேன் என்றும், யதார்த்த நிலையில் இருந்து வழுவாமல், செயற்கையைப் புகுத்தாமல் வடித்தேன் என்றும், தொழிற் சங்கங்கள் செயலிழந்து இருந்த நிலையை காட்டியிருக்கிறேன் எனவும் குறிப்பிட்டார். கவிஞர் ஐயாத்துரையின் தமிழ்த் [illegible] வின் வரவேற்புரை, சுப்பிரமணிய ஐயரின் ஆய்வுரையும் இடம் பெற்ற இவ்விழாவின் அவையின் சுவாரஸ்யம் பற்றி அடுத்த வாரம்.

---

யாழ்ப்பாண நகரில் நிறுவப்பட்டது போன்று

# பனம் பொருள் விற்பனை நிலையங்கள் ஏனைய நகரங்களிலும் நிறுவப்படல் வேண்டும்

அ. சுபாஸ்கரன் (பி. ஏ. சிறப்பு)

யாழ் நகரில் பனம் பொருட்கள் விற்பனை நிலையமொன்று 7-3-1980ல் திறந்துவைக்கப்பட்டுள்ளது. இந்நிலையத்தை பனம்பொருள் அபிவிருத்திச் சபையினர் ஆரம்பித்துள்ளனர். பனம் பொருட்கள் சம்பந்தமான உற்பத்தி நடவடிக்கைகள் பல இலாபகரமாக இயங்கமுடியாமைக்கு இதன் விற்பனைபற்றிய பிரச்சினையே பிரதான காரணமாகும். இலங்கை மக்கள் பாவனையில் இன்று இப்பொருட்களின் பாவனை மிகச் சொற்ப அளவினதாகவே உள்ளது. எனவே இப்பொருட்களின் உற்பத்தியில் விற்பனைப் பிரச்சினை நிலவுவது இயல்பானதே. இவ்வாறான நிலைமையில் விற்பனை நிலையம் திறந்தமை வரவேற்கத்தக்க நடவடிக்கை எனலாம்.

யாழ். குடாநாட்டின் முதியவர்கள் மத்தியில் பனம் பொருட்களின் பாவனைபற்றி வினவின் தாம் இளமைப் பருவத்தில் இப்பொருட்களையே அதிகம் உண்டதாகவும் அதனால் தாம் மிக்க ஆரோக்கியமாக உள்ளனரென்றும் சொல்லி மகிழ்வர். உண்மையில் ஆங்கில ஆட்சிக்காலத்து நடுப்பகுதிவரை (1875-ம் ஆண்டுவரை) குடாநாட்டு மக்களால் பனம் பொருட்கள் அதிகளவு பயன்படுத்தப்பட்டுவந்துள்ளன. எனவேதான் தற்போது இப்பொருட்களுக்கு நிலவும் விற்பனைப் பிரச்சினை அக்காலத்தில் நிலவவில்லை.

ஆங்கில ஆட்சிக் காலத்தின் கடைப்பகுதியில் (1900 ம் ஆண்டிலிருந்து) பனம் பொருட்களின் பாவனை குடாநாட்டு மக்களிடையே குறையத் தொடங்கியது. ஆங்கிலக் கல்வியைக்கற்ற பலரும் ஆங்கில உடை, நடை, பாவனையைப் பின்பற்றத் தொடங்கினர். இதனால் இம்மக்களின் மனநிலையில் பனம்பொருட்கள் அநாகரீகமானவையாகக் கருதப்படலாயிற்று; ஆரம்பத்தில ஆங்கிலக்கல்வி கற்றவரிடையே காணப்பட்ட இம்மனமாற்றம் காலப்போக்கில் ஏனைய பெரும்பாலான மக்களிடையும் ஏற்படலாயிற்று. மக்கள் பாவனையில் ஆங்கில ஆட்சியினரால் அறிமுகப்படுத்தப்பட்ட சில பொருட்கள் பனம் பொருட்களின் இடத்தைப் பிடித்துக் கொண்டன. இவற்றுள் கோதுமை மா, கருப்பஞ்சீனி என்பனவற்றின் அறிமுகம் புழுக்கொடியல், ஒடியல்மா,

### இழந்த செல்வாக்கு

பனம் பொருட்கள் யாழ். குடாநாட்டில் தமது இழந்த செல்வாக்கை புதுப்பிப்பதற்கும் ஏனைய பகுதிகளிலும் அறிமுகமான இப்பொருட்கள் அதிகம் பாவனைப்படுத்தப்படுவதற்கும் நாட்டின் மையப்பகுதிகள் பலவற்றிலும் யாழ். நகரில் இடம்பெற்றமை போன்று விற்பனை நிலையங்கள் நிறுவப்படுவது பெரிதும் விரும்பத்தக்கதாகும். இவ்விற்பனை நிலையங்கள் நிறுவுதல் மூலம் மக்களின் மனநிலையில் பனம்பொருட்களின் பாவனை பற்றிய நிலைவு விரிவுபடும்;

பனங்கட்டி போன்றவற்றின் பாவனையைப் பெரிதளவில் பாதித்தது எனலாம்.

ஆங்கில ஆட்சியின் கடைப் பகுதியில்தான் பனாட்டு, புழுக்கொடியல், பனங்கட்டி முதலிய பனம் பொருட்கள் குடாநாடு அல்லாத ஏனைய இலங்கையின் பல பகுதிகட்கும் அறிமுகமானது. இவ்வறிமுகத்தை இலங்கையில் பல பகுதிகளிலும் நிறுவப்பட்டிருந்த யாழ்ப்பாணத்தவரது புகையிலை, கருட்டு விற்பனைக் கடைகளே செய்தன. யாழ். குடாநாட்டில் பனம் பொருட்களின் பாவனை செல்வாக்கு இழந்த சமயத்தில் இப்பொருட்கள் இலங்கையின் ஏனைய பல பகுதிகளுக்கு அறிமுகபப்டுத்தப் பட்டமை உற்பத்தியாளர்களுக்கு [illegible] எனினும் பாவனையில் மொத்த அளவு என்ற அடிப்படையில் உற்பத்தியாளர்களுக்கு இவ் அறிமுகம் பெரிதும் உதவவில்லை.

இன்று சீனி, மா போன்ற இறக்குமதிப் பொருட்களின் உலகச் சந்தை விலை நாளாந்தம் உயர்ந்துவருகின்றது. இந்நிலையில் இவற்றைத் தொடர்ந்து இறக்குமதி செய்தால் ஓர் ஆரோக்கியமான பொருளாதாரத்திற்கு அழகல்ல. எனவே இப்பொருட்களின் பாவனையிடத்தை பனம் பொருட்கள் போன்ற உள்ளூர் பாவனைப்பொருட்கள் மூலம் ஈடுசெய்தல் அவசியமாகிறது. நீண்டகாலமாக பனம்பொருட்களைப் பாவிப்பது அநாகரீகமானது எனும் மனநிலை பெரும்பாலான மக்களிடம் நிலைத்துள்ளது. இக்குறைபாட்டை நீக்கும் வகையில் பனம்பொருட்களின் வெளியீடுகள் நவீனத்துவ நடைமுறைகளை அனுசரித்து விற்பனைக்கு வரல்வேண்டும். இதில் இவ் விற்பனை நிலையங்கள் அதிக கவனம் எடுத்தல்வேண்டும்.

(9-ம் பக்கம் பார்க்க)

---

## வேள்வி

பறை யெழுந்து வானைமுட்டி
   பலத்த சத்தம் செய்யுது
இறை யெழுந்து ஓடுகின்றான்
   என்று சத்தம் கொட்டுது

பாட் டொலியின் பேரிரைச்சல்
   பலரின் தூக்கம் கலைக்குது
கேட் டதனுல் ஆடுகளோ
   கேவி மனம் அலறுது

காலை யெழுந்த சேவல்கோழி
   கடைசி யாகக் கூவுது
மாலை யிட்ட ஆட்டுக்கடா
   மதி மயங்கி நிற்குது

கோயில் வீதி ஆடுகளாய்
   கோலம் கொண்டு விளங்குது
தேரயும் வீதி இரத்தமதால்
   சோகம் கொள்ள நிற்குது

ஒரு கடாவோ மண்ணில்வீழ்ந்து
   கூரத்த சத்தம் வைக்குது
அரு கிருந்த சேவல்கோழி
   அலறித் தானும் மாயுது

ஆடிழுத்து வந்து வெட்டி
   ஆடுகின்ற பக்தர்கள்
கோடியின்னல் கண்டும் வாழ்வில்
   கொண்ட கோலம் விட்டிலர்

- வ. க. பரமநாதன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலக் கண்ணாடி

மக்கள் சீனக் குடியரசில் மீண்டும் வெளிநாட்டு நாடகங்கள் மேடையேறத் தொடங்கியிருப்பதாக அங்கிருந்து வரும் சஞ்சிகைகளில் இருந்து அறிய முடிகிறது. கலாச்சாரத்துறையிலும் நால்வர் கும்பலின் ஆதிக்கம் வலுப்பெற்றிருந்த காலத்தில் சுமார் 12 வருட காலம் வெளிநாட்டுக் கலைப் படைப்புக்கள் மேடையேறுவதற்கு கடுமையான தடை இருந்து வந்தது.

வெளிநாட்டு நாடகங்கள் சீனாவில் திரையிடப்படுவது கடந்த ஆண்டு வாக்கில்தான் மீண்டும் ஆரம்பமாயிற்று.

பெய்ஜிங் நகரில் சீன இளம் கலைஞர் தியேட்டரில் முதன் முதல் ஜெர்மானிய முற்போக்கு நாடக எழுத்தாளர் பெர்ரோல்ட் பிரக்செட்டின் 'கலிலியோ' நாடகம் மேடையேற்றப்பட்டதுடன் சீனாவின் ஏனைய தியேட்டர்களிலும் வெளிநாட்டு நாடகப் படைப்புகள் மேடையேறத் தொடங்கின

நாடகாசிரியர் பிரிச்செட் சீன மக்களுக்குப் புதியவரல்லர் கலாச்சாரப் புரட்சிக்கு முன்னரே ஷாங்காய் மக்கள் கலை தியேட்டரில் இவரது மதர் கரேஜ் என்ற நாடகம் மேடையேறியுள்ளது.

●

தஞ்சை பெரிய கோயிலைக் கட்டியெழுப்பி தமிழகத்துக்கும் தனக்கும் மங்காத புகழை ஏற்படுத்திக் கொண்ட இராசராசன் என்றழைக்கப்படும் அருண்மொழிவர்மன் சிவபெருமான் மீது அளவிலா பக்தி கொண்டவன் என்பதால் சிவபாதசேகரன் என்ற பெயரையும் பெற்றிருந்தான் மட்டிலா சிவ பக்தனான இந்த சோழனுக்கு பிற மதத்தவர் மீது எள்ளளவும் வெறுப்பிருந்ததில்லை. இதற்கு பெரிய கோயிலில் அமைந்துள்ள சிற்பங்களே சான்று பகர்வதாக அறிஞர் கூறுவர்.

கோயிலின் தெற்கு வாயிலின் கிழக்குப் பாகத்தில் புத்தபிரான் போதி மரத்தடியில் அமர்ந்திருக்க அரசன் தன் பரிவாரங்களுடன் சென்று தரிசித்து வணங்குவதாக சிற்பம் அமைந்துள்ளது. உள்ளே திருச் சுற்றுப்புறத்திலுள்ள ஓவியக் குவியல்களிலும் புத்தபெருமானின் உருவம் காணப்படுகிறதாம்

●

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் அண்மையில் அத்தியாவசியப் பண்டங்களின் விலைகள் தொடர்பாக பல ஆசிய நாடுகளில் ஒரு ஆய்வு நடத்தியதாம் அதில் அத்தியாவசிய நுகர்வுப் பொருட்களின் விலைகள் ஏனைய ஆசிய நாடுகளிலும் பார்க்க கணிசமான அளவு இலங்கையில் குறைவாக இருக்கின்றனவென்ற உண்மை வெளியாகியிருக்கின்றதாம் இது பற்றிக் கொழும்புப் பத்திரிகைகளில் முழுப் பக்கத்தில் விளம்பரம் போடப்படுகின்றது. தகவல் திணைக்களத்தினால் பெரும் செலவில் அடிக்கடி வெளியிடப்படும் இந்த விளம்பரத்தின் மூலம் ஏனைய ஆசிய நாடுகளைவிட இலங்கையில் அத்தியாவசியப் பொருட்களின் விலைவாசிகள் மிகக் குறைவு என்பதை பொதுமக்களுக்கு எடுத்துக் காட்டுகிறார்கள். இதற்கு ஐ. நா. நடத்திய ஆய்வு விபரத்தையும் எடுத்துக் காட்டுகிறார்கள் இந்த மதிப்பீட்டின்படி ஒரு இறாத்தல் பாணின் விலை பாகிஸ்தானில் ரூ. 8 40 பிலிப்பீன்ஸில் ரூ. 8 10 தாய்லாந்தில் ரூ 7 70 இந்தோனேசியாவில் ரூ 7.50 மலேசியாவில் ரூ. 4 74 சிங்கப்பூரில் ரூ. 2.83 இந்தியாவில் ரூ 2 27 இலங்கையில் ரூ 2 05

இவ்வாறே சீனி, மா, ஆடை நிறைந்த பால்மா, மண்ணெண்ணெய், அரிசி ஆகியவற்றின் விலைகளும் காட்டப்பட்டுள்ளன. இந்த விளம்பரத்தின்படி பார்க்கும்போது இலங்கையில் நுகர்வுப் பொருட்களின் விலைகள் மிகவும் குறைவுதான். அந்தவகையில் நாமெல்லாம் பெரிய பாக்கியசாலிகள் ஆனால்...?

இந்த விலைவாசிகளை விபரமாகப் போடும் போது, அந்தந்த நாடுகளில் தனி மனிதனின் அன்றாட வருமானம், சம்பளம் ஆகியவற்றுடன், ஏனைய நாட்டு நாணயங்களுடன் (மதிப்புக் குறைக்கப்பட்ட) நம்நாட்டு ரூபாயின் மதிப்பு விகிதம் போன்ற விபரங்களையும் வெளியிட்டிருந்தால் இன்னும் திருப்தியளிப்பதாய் இருந்திருக்கும்! அல்லவா?

●

திரைப்படத் தயாரிப்பாளர் சேர். அல்பிரட் ஹிச்கொக் அண்மையில் காலமானார் மர்மம், பீதி, அங்கலாய்ப்பு போன்ற உணர்வுகளை பார்வையாளர்களுக்கு ஏற்படுத்தி படத்தை வெற்றிகரமாக ஓட்டுவதில் இவர் பெரும் வல்லுநர்

இவர் ஆறு வயதுச் சிறுவனாய் இருந்தபோது குட்டித்தனம் புரிந்தமைக்காகத் தந்தையார் பொலிசில் கொண்டு போய் 5 நிமிடங்கள் "லொக் அப்'பில் வைக்க ஏற்பாடு செய்தாராம். அப்போது ஏற்பட்ட மனப்பயம்தான் பயங்கர மர்மங்கள் சூழ்ந்த படங்களை எடுக்கத் தன்னைத் தூண்டியது என ஹிச்கொக் கூறியுள்ளார், மனப்பீதியை மர்மப் படங்கள் மூலம்தாம் வெளியிட்டதாக அவர் கூறியுள்ளார்.

இந்தப் பயம் காரணமாக கார் ஓட்டக்கூட தாம் கற்றுக் கொள்ளவில்லையாம், பொலிசார் தனது லைசென்சைப் பரிசீலிப்பார்களோ என்ற பயத்தில்!

- பேனா -

# சீதையின் குணநலன்கள் சுந்தரகாண்டத்திலேயே சிறப்பாகப் பேசப்படுகிறது

**கம்பராமாயணம் முழுவதும் சீதையெனும் கதாபாத்திரம் நடமாடிக்கொண்டிருந்தாலும் சுந்தர காண்டத்திலேயே சிறப்பாக வீற்றிருக்கிறது சீதையின் கடந்த காலவாழ்வும் எதிர்காலவாழ்வும் அசோகவனத்திலேயே சிறப்பாக விளக்கப்படுகின்றன.**

கவிஞர் பெருமானாகிய கம்பர் தாம் இயற்றிய இராமாயணத்திலே பல பெண்களைச் சித்திரித்துள்ளார் கம்பராமாயணத்திலே வருகின்ற பெண்கள் தமிழ் மரபு பேணும் பெண்களாகக் காணப்படுகின்றனர் கவியாற்றலின் மூலம் பெண்களின் சிந்தனைகளை நுணுக்கமாகக் கம்பர் காட்டிச் சென்றுள்ளார். காவிய நாயகியாகிய சீதாதேவியைப் பற்றிய பண்புகளைக் கம்பராமாயணத்தில் அமைந்துள்ள சுந்தர காண்டத்துச் செய்யுட்கள் சிறப்புற விளக்கி நிற்கின்றன. தேவியின் அழகினை நாம் உணர்ந்து கொள்வதற்குச் சுந்தர காண்டத்திலமைந்துள்ள இருபடலங்களே போதுமானவையாக இருக்கின்றன. சீதாதேவியின் குணநலங்களினூடாக காவிய நாயகனின் குணநலங்களும் வெளிப்பட்டு நிற்கின்றன. இது கம்பர் செய்த அற்புதம். பெண்ணின் சிந்தனை ஓட்டங்களுக்கூடாக உலகத்தையே தரிசிக்கவைக்கின்றார்.

இராமன் கதை தமிழர் வாழ்வியலைக் காட்டுவதோடு மட்டுமன்றிப் பண்பாட்டின் பரம்பலாகவும் வேண்டுமென்ற கம்பரது பெருவிருப்பத்தையும் கூறி நிற்கின்றது. சீதையின் நற்பண்புகளைப் பற்றி எடுத்துக் கூறுவதற்கு ஆரவாரமற்ற தனிமைச் சூழலைக் கம்பர் எடுத்துக்கொள்ளாது புதியதொரு சூழலையே கையாண்டுள்ளார். கம்பராமாயணம் முழுவதும் சீதை எனும் கதாபாத்திரம் நடமாடிக்கொண்டிருந்தாலும் சுந்தரகாண்டத்திலேயே சிறப்பாக வீற்றிருக்கின்றது. சீதையின் கடந்த கால வாழ்வும் எதிர்கால வாழ்வும் அசோக வனத்திலேயே சிறப்பாக விளக்கப்பட்டுள்ளன. சிறையிருந்த செல்வியான சீதை பெண்கள் குலப் பிரதிநிதியாக அங்கு நிற்கிறாள். கம்பர் அவளை வர்ணித்துக் காட்டுவதன் மூலம் தமிழ்க் குலப் பெண்களின் குணநல இயல்புகளையே விளக்கிக் காட்ட முயல்கிறார்.

### அரக்கர் மத்தியில்

இராவணனால் கவரப்பட்டு அசோகவனத்திலே சிறைவைக்கப்பட்ட சீதை தன் வாழ்க்கையைப்பற்றி பின்னோக்கிப் பார்ப்பதற்கு ஒரு நல்ல சந்தர்ப்பம் கிடைக்கிறது. பெண் குலத்தைப் பொறுத்தவரையில் வள்ளுவர் கூறும் வாழ்க்கைத் துணை நலத்திற்கான சிறப்பியல்புகளைப் பெண் பெற்றபோதும் பிழைவிடும் சந்தர்ப்பங்களும் ஏற்படலாம் என்பதைக் கம்பர் உணர்த்த முற்பட்டுள்ளார்.

அசோக வனத்திலே அரக்கியர் நடுவினிலேயிருந்து அல்லலுறும் சீதையின் நிலைமை வாயிலாக இது உணர்த்தப்படுகிறது அவள் நிலைமை சோக சித்திரமாக வர்ணிக்கப்படும் அதேவேளையில் பெண்ணினத்தின் பேதைத் தன்மையும் வெளிப்படுத்தப்படுகின்றது. சீதாதேவியின் அப்போதைய நிலைமையினை வருணிக்கும் கம்பர் அவள் சிந்தனைகளைக் கவிதையாக்கி பெண்ணினத்தையே விழிப்புணர்ச்சியடையச் செய்கிறார்.

அரக்கியர் நடுவிலேயிருந்து வாடுகின்ற சீதையின் உடல் மெலிவு பல பாடல்களில் கூறப்படுகின்றது. அதனை பல்வேறு உவமைகள் வாயிலாக கம்பர் கூறுகின்றார். கற்பாறையின் நடுவே முளைத்து ஒரு துளி நீரையேனும் காணாது வாடுகின்ற நல்ல சஞ்சீவிச் செடியைப்போல அசோகவனத்துச் சிறையிலே சீதை தன் அழகுகெட வாடுகின்றாள். உயிர் மருந்தாகிய சஞ்சீவிச் செடி கல்லினிடையேதோன்றி நீர்த்துளியை பெறுமல் வாடுவதைப்போன்று சீதாபிராட்டியும் அரக்கியர் நடுவிலிருந்து எவ்வித இன்பையும்பெற இயலாமல் வருந்துகின்றாள் சீதையின் நிலைமையை இவ்வுவமை தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. புலிக்கூட்டத்திலே அகப்பட்ட இளமான்போல சீதை தவிக்கிறாள். அவள் உடலொளி பிரகாசம்கெட்டு வெயிலில் இட்ட விளக்கை ஒத்திருக்கின்றது. துன்பத்தின் மிகுதியால் வாடும் அவள் செய்கைகளை கம்பர் வகைப்படுத்திக் கூறும் போது பல சோகச் சித்திரங்களைப் படைத்துள்ளார். தொழுதல், விழுதல், விம்முதல், [illegible] எனப் பல்வேறு நிலைமைகளில் சீதையின் துயர் வருணிக்கப்படுகின்றது. கதியற்ற நிலையில் துயரின் பல்வேறு நிலைகளைப் புலப்படுத்துதல் ஒன்றையே சீதையின் தொழிலாகக் கம்பர் வருணிக்கிறார். இங்கு அவள் கற்பின் திறமும் பண்பாடும் மறைமுகமாக உணர்த்தப்படுகின்றன. கண்களிலிருந்து கண்ணீர் ஆறுகப் பாய்ந்தோட அவள் அமர்ந்திருக்கும் காட்சியும் அவள் தேகத்தின் தோற்றமும் சோகத்தின் வளர்ச்சி நிலைகளை விளக்குகின்றன. பிரிவுக்கு உருவம் கொடுத்தாற்போல சீதை வீற்றிருக்கின்றாள்.

### உள்ளத்து சிந்தனைகள்

இந்நிலையிலே அவள் உள்ளத்தெழுகின்ற சிந்தனைகளைக் கம்பர் கவிதை வடிவிற் புலப்படுத்திக் காட்டுவது சிறப்பாக அமைந்துள்ளது. இராமனைப் பிரிந்துவாடும் சீதையின் கண்களில கருமையான உருவம் எது தென்பட்டாலும் அது இராமனையே நினைவுபடுத்துகின்றது. ஒருவனைத் தன் கணவனைக் கொண்டுவாழும் தமி

மனோன்மணி சண்முகதாஸ்

ழர் பண்பாடு சீதையின் வாயிலாக விளங்குகின்றது.

> உரிய காதலின் ஒருவரோடு ஒருவரை உலகில்
> பிரிவு எனும் துயர் உறவு கொண்டால் அன்ன பிணியள்

எனும் தொடர்மூலம் இதைக் கம்பர் காட்டுகின்றார், சீதையின் கருத்தொருமித்த காதல் உள்ளத்தைக் கம்பன் தன் கற்பனை ஆற்றலால் கவிதை வடிவாக்கித் தந்துள்ளார்.

இராமனின் வரவை எதிர் பார்த்திருக்கும் சீதை தான் சிறைக் காவலைக் கடந்து தானாகவே தப்பிப்போக முடியாதென்பதை எண்ணுகிறாள், அப்படிச் சிறைக்காவலைக் கடந்துபோக எண்ணுதல் விதியின் வலியை கடக்க முயலும் செயலாகும் என்பதுதெரிந்து கொள்கிறாள். அச்சந்தர்ப்பத்தில் தன் வாழ்வின் கடந்த காலச் சம்பவங்களை எண்ணிப் பார்க்கிறாள் தன் [illegible] குலத்திற்கு ஏற்பட்ட நிராட பழியை நீக்குவதற்காக கட்டாயம் நினைவுகூருவதன் மூலம் சோதித்துப் பார்த்துக்கொள்கிறாள். பெண்மையின் டன் [illegible] அந்நேரத்தில் பல சிந்தனைகள் அவள் மனத்திலே வந்துதோன்றுகின்றன. அழகுத் தோற்றமும் குன்றிப் புகையுண்ட ஓவியம்போலச் சீதை சிந்தனை வயப்பட்டிருப்பதை மயபார் அழகாக கவிதைகளிலே காட்டியுள்ளார் தன் கணவன் ஒப்பற்ற வீரனாயிருந்தபோதும் இத்துணைக் காலமும் தன்னைவந்து மீட்டுச் செல்லாததற்கு என்ன காரணம் என்பதைச் சீதை சிந்திக்கிறாள் ஆரம்பம்முதல் நடந்த நிகழ்ச்சிகள் அவள் மனத்திரையில் மீண்டும் தோன்றுகின்றன.

பொன்மானின் பின்னே சென்ற இலக்குமணன் இராமனைக் காணவில்லைபோலும். அதனால் உலகத்தையே வருத்துகின்ற இராவணன் என்னை எடுத்துச்சென்று இங்கு சிறை வைத்திருக்கும் செய்தியை அறியவில்லைப்போலும். அப்படி அறிந்தாலும்கூட பெருங்கடலில் நடுவே இலங்கை மாநகரம் உள்ளதென்ற செய்தியை அவர்கள் அறிய மாட்டாரே என்று எண்ணி வருந்துகின்றாள். இராமன் பிரிவால் துன்புற்ற சீதையின் மனம் இத்தகைய சிந்தனைகளால் புண்ணின் வாய் திறந்திருக்க அப் புண்ணின் வாயிலே கனல் புகுந்தாற் போல தாங்க முடியாத துன்பத்தால் வாடுகின்றது என்னை இராவணன் கவர்ந்த போது இடையே நிறுத்தி போர் செய்த சடாயுவும் இறந்திருந்ததால் எனது நிலைமையை எடுத்துச் சொல்வதற்கு எவருமே இருக்க மாட்டார்கள். எனவே இப்பிறப்பிலே இராமன் என்னைத் தேடிக் கண்டுபிடிக்க முடியாது போய்விடுமோ எனறு வருந்துகின்றாள்.

### அவள்செய்த பிழை

இச்சந்தர்ப்பத்தில் தான் தான செய்த பிழைகளைச் சீதை எண்ணுகிறாள் இலக்குமணனை மதியாது உரைத்த வார்த்தைகளை எண்ணுகிறாள். தான் அவ்வாறு உரைத்த வார்த்தைகளை இராமன் அறிந்திருக்கக்கூடும் அதனால்தான் என்னை இன்னும் இராமன் தேட முற்படவில்லை தம்பியை மதியாது நான் உரைத்த வார்த்தைகளைக் கேட்டு இராமன் என்னை வெறுத்திருக்கக்கூடும். அல்லது இவ்வாறு எனது நிலைமை வருவதற்குப் பொல்லாத தீவினையை நான் செய்திருக்கவேண்டும் என எண்ணி மாய்கிறாள். தன்னைச் சுற்றிக் காவலிருக்கும் அரக்கியர்கள் புத்தெடுப்பதையே உணராதவளாய் சீதை இருக்கின்றாள், காட்டில் தான் நடத்திய இல்லற வாழ்வின் தன்மைகளை நினைந்து பெருமூச் செறிகிறாள். தன் துணைவனுக்கு உணவிடும் பேறு அற்றிருப்பதையும் விருந்தினர் வந்தால் இராமன் நிலை என்னாகும் என்பதையும் எண்ணி வெம்புகிறாள் இங்கே மனைவி என்ற நிலையிலிருந்து தான் ஆற்ற வேண்டிய கடமைகளை ஆற்ற முடியாதிருப்பதைச் சீதை எண்ணும்போது அவள் பண்புள்ளம் வெளிப்படுகின்றது. ஒருவனுக்கு ஒருத்தியாக் வாழ்வது மட்டுமன்றித் தனது கடமைகளிலும் தவறாது இருக்க வேண்டுமென்ற பெண்ணின் பெருமை சீதாதேவி காட்டி நிற்கிறாள். இராமனின் நல்ல பண்புகளை எண்ணித் தன் பிரிவுத்துயரை தணிக்க முற்படுகிறாள். தன் நாயகனின் வீரத்தை எண்ணிநிச்சயம் தன்னைச் சிறைமீட்க வருவான் என நம்புகின்றாள் இராமனின் வில்லாண்மையைப் பல சந்தர்ப்பங்களிலே சீதை காணவிட்டாலும் அவள் கண்ட சந்தர்ப்பங்கள் இந்நம்பிக்கையை வளர்த்து நிற்கின்றன. தனது அருகாமையையே தம்பிக்காகக் கொடுத்து [illegible] வந்தபோது இராமனின் முகத்திலிருந்த பொலிவு [illegible] சீதையை வியப்பிலாழ்த்துகின்றது. கோபம் என்பதையே வெளிப்படுத்தாத அந்த சாந்தமான திருமுகத்தினை நினைக்கும் போது தனது பிழைகளையும் இராமன் மன்னித்துவிடுவான் என அமைதி பெறுகின்றாள். இராமன் வில்லாண்மையால் தன் திருமணம் நடந்தது என்பதை எண்ணும் போது சீதையின் மனம் மகிழ்ந்தது.

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# துளிகள்

வரதர்

## புலவர் நினைவு

'ஈழநாடு' வார இதழில் தொடர்கட்டுரை எழுதி வரும் பல்வைத்திய கலாநிதி பாரதியை இப்போது எல்லாருக்கும் தெரியும். இவருடைய தகப்பனார் பண்டிதர் இளமுருகனார் ஒரு காளமேகம். தமிழிலே தவறைக் கண்டால் துர்வாசர். இந்த இளமுருகனாரின் தகப்பனார் யாழ். பஸ் நிலையத்துக்குப் பக்கத்தில் முழம் ஏட்டைப் பிடித்துக் கொண்டு சிலையாக உட்கார்ந்திருக்கிறாரே, அந்தச் சோமசுந்தரப்புலவர் (சோமசுந்தரப்புலவர் நல்ல சிவந்த நிறம். வெள்ளை வெளேரென்ற உடுப்பும், வெள்ளைத் தாடி மீசையுமாக-தலையை மூடிக்கொண்டு நினைத்துப் பார்த்தால் ஒரு பிரகாசமான தோற்றம் தான் வரும். அந்தக் கவிஞரின் சிலைக்கு ஏன் தான் இப்படிக் கன்னங் கரேலென்ற கறுப்புச் சாயம் அடித்திருக்கிறார்களோ தெரியவில்லை. 'சிலை' என்றால் கறுப்பாகத்தான் இருக்க வேண்டும் என்ற ஒரு நினைப்புப் போலும்! அந்தச் சிலைக்கு நல்ல வெள்ளை நிறம் போட்டு வைத்தால் புலவருடைய தோற்றத்துக்கு ஏற்றதாக இருக்குமென்று நினைக்கிறேன்.)

சுமார் முப்பதைந்து ஆண்டுகளுக்கு முன்னால் நான் சிறு பையன். 'கதிரைத் தோட்டத்து வெருளி' யைப் படித்துவிட்டு அதைப் பாடிய புலவரைப் பார்க்க வேண்டும் என்ற ஆசையால் நவாலிக்குப் போனேன். அவருடைய வீட்டில் அவருக்காக நான் காத்திருந்த போது அவர் வயலிலிருந்து தோளில் மண்வெட்டியுடன் வந்த காட்சி இப்போதும் நினைவிருக்கிறது. சோமசுந்தரப் புலவர் ஒரு மாகவி ஆனால் மிகவும் எளிய சாதாரண மனிதர். மக்களோடு மக்களாக வாழ்ந்த மக்கள் கவிஞர். அவருடைய பல கவிதைகளிலே யாழ்ப்பாணத்து மண்வாசனை கமகமக்கும்!

புலவருடைய கவிதைகள் சிலவற்றைத் தொகுத்து வெளியிட்ட இளமுருகனார் அந்நூலுக்கு 'சிறுவர் செந்தமிழ்' என்று பெயரிட்டிருந்தார். (இளமுருகனார் எதை நினைத்தாரோ தெரியவில்லை - ஆனால் அந்த நூலிலுள்ள பாடல்கள் சிறுவர்களுக்கல்ல, தமிழ்க் கவிதை படிக்க விரும்பும் எல்லாருக்குமே இனிய சொத்தாகும்.)

இன்றைய இலக்கியப் படைப்பாளிக்கு ஒரு ஒளி விளக்காக அமையும்படி, புலவருடைய சில கவிதைகளைத் தொகுத்து வெளியிட்டால் ஒரு நல்ல இலக்கிய சேவையாக இருக்கும்.

## மனச் சாட்சியை விற்குமிடம்

ஈழவேந்தன் பகிரங்கக் கூட்டமொன்றில் பேசியது பற்றி சென்ற வாரம்தான் குறிப்பிட்டிருந்தேன். இப்போது ஈழவேந்தனும் அவருடன் சேர்ந்து சுதந்திரன் கோவை மகேசனும் கூட்டணியிலிருந்து தற்காலிகமாக வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். இந்த இரண்டு பேரும் கட்சியோடு நன்றாக ஊறியவர்கள். இவர்களே இன்று இந்த நிலைக்கு வந்திருப்பதைப் பார்த்தால் கட்சிக்குள்ளே ஏதோ கடும் புயல் வீசிக்கொண்டிருக்கிறதென்றே தோன்றுகிறது. கட்சி ரீதியாக இயங்கி ஒரே லட்சியத்துக்காகப் போராடுகிறவர்கள் இப்படி உதிரிகளாக வெளியேறினால், கட்சிக்கு ஒரு கலக்கம் வரும். வெளியேறியவர்கள் பாடோ பெரும்பாலும் அதோ கதியாய் விடும்! ஒரு கட்சிக்குள் புகுந்துவிட்டால் சில சந்தர்ப்பங்களில் மனச் சாட்சியை விற்றுவிடவும் வேண்டியது தான் - அதுதான் நீதி!

## பொன் மொழி

'நீதி' என்று ஒன்று இல்லை. அவ்வச் சந்தர்ப்பத்துக்கு ஏற்ற விதமாக அது வடிக்கப்படுகிறது!

(கவிதை இயற்றவேண்டுமென்ற ஆசை இருக்கின்றதா? அதுபற்றி அறிந்துகொள்ள விரும்புகிறீர்களா? கவிதையுள்ளம் படைத்த இள வயதினருக்குப் பயன்தரும் நல்ல கருத்துக்களை புலவர் பார்வதிநாதசிவம் இங்கு தருகிறார் தொடர்ந்து படித்துப் பயனடையுங்கள்.)

# கவிதை இயற்றுவது எப்படி?

-புலவர் பார்வதிநாதசிவம்

இன்று ஈழத்திற் கவிதைக்கலை செழித்து வளர்ந்து மலர்ந்து மணம் வீசிக்கொண்டிருக்கிறது. இது மரபுவழிக் கவிதை என்ற பெயரிலும் வசன கவிதை என்ற பெயரிலும் இருபெரும் பிரிவில் வளர்ந்துகொண்டிருக்கிறது. இளம் கவிஞர்கள் பலர் வார மலர்களிலும் சஞ்சிகைகளிலும் எழுதிக்கொண்டிருக்கிறார்கள. கவிதைகளைச் சுவைத்து வாசிப்போரும் இன்று பல்கிப் பெருகிக்கொண்டே இருக்கின்றனர். இது வரவேற்கப்படவேண்டிய மகிழ்ச்சியடையவேண்டியதொன்றாகும்.

ஒரு மொழியைக் கவிதை வடிவிலோ அல்லது உரை நடை வடிவிலோ பிழையற எழுதுவதற்கு இலக்கண அறிவு இன்றியமையாதது என்பதை யாவரும் ஒத்துக்கொள்வார்கள். கவிதை எழுதவேண்டும் என்ற ஆர்வம் படைத்தவர் ஓரளவாவது இலக்கண அறிவைப் பெற்றிருக்கவேண்டும். குரல் வசதி இருந்தாலும் இல்லாவிட்டாலும் முதல் முயற்சியாகக் கவிதையை இசையோடு பாடிக்கொண்டுவருதல் வேண்டும். பாரதியார், பாரதிதாசன் போன்றவர்கள் மிக இலகு நடையில் தமது பாடல்களை இயற்றியுள்ளார்கள். பொதுவாக இவர்களுடைய பாடல்கள் அதிலும் சிறப்பாக இவர்களுடைய எண்சீர் விருத்தங்கள் பல முறையும் இசையோடு பாடும் ஒருவருக்கு அதேமாதிரியான பாடலை இயற்றும் ஆற்றலைக் கொடுக்கக் கூடியன. உதாரணத்திற்குப் பாரதிதாசனுடைய முதல் தொகுதியிலுள்ள 'நீலவான் ஆடைக்குள்' என்ற எண்சீர் விருத்தத்தை எடுத்துக்கொள்வோம். இதோ இருக்கிறது முழுப்பாடல்.

நீலவான் ஆடைக்குள் உடல் மறைத்து
நிலாவென்றுகாட்டுகின்றாய் ஒளிமுகத்தைக்
கோலமுழுதும் காட்டிவிட்டாற் காதற்
கொள்ளையிலே இவ்வுலகம் சாமோ?வானச்
சோலையிலே பூத்தத தனிப்பூவோ? நீதான்
சொக்கவெள்ளிப்பாற்குடமோ அமுதஊற்றோ?
காலை வந்த இளம் பரிதி கடலுள் மூழ்கிக்
கனல் மாறிக்குளிர் அடைந்த ஒளிப்பிழம்போ?

இந்தப்பாடலைப் பாடல் இயற்ற ஆரம்பிப்பவர் தாம் விரும்பும் இசையிற் பாடுவதுடன் மனப்பாடம் செய்துகொள்ளுதல்வேண்டும். அப்படி முயற்சிசெய்யும்போது பாடலின் வரிகளுக்கு உரிய ஒலி அளவினை அவர் தெரிந்துகொள்வார். பின்பு தாம் சொல்ல வந்த கருத்தை அதே அளவு ஒலிகொண்ட வரிகளில் சொல்ல முயல்தல் வேண்டும்.

(தொடரும்)

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

# ரஜனிகாந்த்...

பார்த்ததும் ரஜனிகாந்த் கண்ணீர்விட்டு அழுதார். ஷோபா மிகச் சிறந்த நடிகை. அவரது மரணம் இந்தியப் படவுலகுக்கு பெரும் இழப்பு ஆகும். முள்ளும் மலரும் படத்தில் அவர் எனக்கு தங்கையாக நடித்தார். ஒரு தங்கையைப் போலவே என்னுடன் பழகினார். நானும் என் தங்கையை இழந்துவிட்டேன் என்று ரஜினிகாந்த் கூறினார்.

## அற்புதமான நடிகை

டைரக்டர் மகேந்திரன் கூறியது. அற்புதமான ஒரு நடிகையை படவுலகம் இழந்துவிட்டது. ஷோபா இறந்துவிட்டாலும் அவர் நடித்த படங்கள் மூலம் நம்மிடையே வாழ்கிறார் என்று கூறினார்.

சமீபத்தில் விபத்தில் சிக்கி காலில் அடிப்பட்ட விஜயனும் வந்திருந்தார். ஷோபா இறந்த செய்தி கேட்டதுமே டைரக்டர் துரை அங்கு வந்து மலர் வளையம் வைத்தார். ஷோபாவின் உடல் பெரியாஸ் பத்திரிக்கு எடுத்துச் செல்லப்படுவதை டைரக்டர் துரை ரங்காவின் உதவியுடன் படமாக்கினார்.

நடிகை சீமா விரைந்து வந்து கண்ணீர்விட்டு அழுதார். ஜெயசித்திரா, எம். ஆர். ராதிகா, ஜெயசுதா, பிரவீணா, சுவர்ணா, சுபாஜினி, சரோஜா, ரம்பா - டைரக்டர்கள் ஐ. வி. சசி, சேதுமாதவன் - பி. மாதவன், மதிஒளி ஷண்முகம், கன்னட, தமிழ் தெலுங்கு, மலையாள படவுலகப் பிரமுகர்களும் வந்து மரியாதை செலுத்தினர்.

## இறுதி ஊர்வலம்

மறுநாள் வெள்ளிக் கிழமை நடந்த இறுதி ஊர்வலத்தில் ஆயிரமாயிரம் ரசிகர்களும், படவுலகப் பிரதிநிதிகளும், பல்வேறு மொழி நடிக நடிகைகளும் கலந்து கொண்டனர். முன்னதாக உடலைப் பரிசோதித்த டாக்டர்கள் ஷோபா தற்கொலை செய்து கொண்டதாகத் தீர்மானித்தனர்.

ஷோபா இறந்த மே 1-ம் திகதி இரவு 8 மணிக்கு டெலிவிஷனில் ஷோபாவின் மரணம் பற்றி அறிவித்துவிட்டு அவர் நடித்த படங்களிலிருந்து சில விசேட காட்சிகளைத் தொகுத்து ஒளிபரப்பினர்.

ஷோபா 3 வயதுக் குழந்தையாக இருந்த போதே ஒரு மலையாளப் படத்தில் நடித்துள்ளார். 'உத்தியோகஸ்தர்' என்னும் ... படம். அவரது முதல் தமிழ்ப் படம் 'நிழல் நிஜமாகிறது'

## முதல் தடவை

ஷோபாவின் தாயார் பெயர் பிரேமா. இவர் 100க்கும் மேற்பட்ட மலையாளப் படங்களில் நடித்தவர். டைரக்டர் துரை தயாரித்த "பசி" படத்தில் நடித்ததற்காக இந்தியாவின் சிறந்த நடிகை என்னும் பட்டத்தை கடந்த ஏப்ரல் 24-ம் திகதி டெல்கியில் ஜனாதிபதியிடம் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

சென்னையில் வசித்த நடிகை சுனந்தனி 10-வது மாடியில் இருந்து குதித்து தற்கொலை செய்து கொண்டார்.

நடிகை கல்பனா ஒரு ஹோட்டலில் தங்கி விஷமருந்தித் தற்கொலை செய்து கொண்டார்.

நடிகை விஜயஸ்ரீ மர்மமாக இறந்தார்.

அச்சச்சோ சித்ரா என்ற நடிகை தூக்குப் போட்டு இறந்தார். ஆனால் புகழ் ஏணியின் உச்சியிலிருக்கும், ஏராளமான படங்களில் நடித்துக் கொண்டிருக்கும், ஒரு பிரபல நடிகை தற்கொலை செய்து கொண்டது இதுவே முதல் முறையாகும்.


# டிட்டோவின் கையொப்பம்

உலகப்போரில் வீரதீரமாகப் போரிட்டு உலகவீரத் தலைவர்களில் ஒருவராக விளங்கியவரும், கம்யூனிஸ சித்தாந்தத்தை தமக்கும் தமது நாட்டுக்கும் உரிய விதத்தில் செயல்படுத்தி (ஸ்டாலினின் வெறுப்பைச் சம்பாதித்துக் கொண்டு) வெற்றியீட்டியவரும், அணிசேரா நாடுகள் இயக்கத்தை ஆரம்பித்த முப்பெரும் தலைவர்களில் ஒருவருமான மார்ஷல் டிட்டோ தமது 87-வது வயதில் அண்மையில் காலமானார்.

இன்னும் இரண்டொரு தினங்கள் வாழ்ந்திருப்பின் அவர் தமது 88வது வயதைக் கொண்டாடியிருப்பார்.

மார்ஷல் டிட்டோ 1959-ம் ஆண்டு இலங்கைக்கு வந்திருந்தபொழுது இலங்கையர் ஒருவருக்கு வழங்கிய கையெழுத்து (ஆட்டோகிராப்) இங்கு காணப்படுகின்றது.

அண்டியில் டிட்டோவுக்கு அளிக்கப்பட்ட வரவேற்பின் போது அழைப்பாளர்களாகக் கலந்துகொண்டவர்களில் திரு. பி. ஜோர்ஜ் ஜோசப்பும் ஒருவர். அவருக்கு மார்ஷல் டிட்டோ அளித்த கையொப்பத்தின் மாதிரியையே இங்கு காண்கிறீர்கள்.



## கடந்தவார சிறுகதை

சீதனம் பெற்றால்தான் சிறந்த வாழ்வைப் பெறமுடியும்! சீர்சு இருந்தால் மட்டும் சிறந்த பதவி பெற்றுச் சொகுசாகவாழமுடியும்! எமது மண்ணிற்கே உரித்தான சிதைந்துபோன கருத்துக்களைச் சிறப்பாகக் கையாண்டிருக்கிறார் கதாசிரியர்!

வறுமையால் பீடிக்கப்பட்ட பிரபா தன் நோயைக் குணப்படுத்த வெளிநாடு செல்ல, பணத்திற்காக நிர்ப்பந்தத்தின் பேரிலுள்ள சுமைகள் போதாதென்று மேலும் சுமைகளை அதிகரித்துக்கொள்கிறான். சுமைகளிலேயே சுகங்கண்ட அவனுக்குப் புதிதாய் வந்ததையொன்றும் பெரிதல்ல-புதிதுமல்ல!- அவர்களது விடிவிற்கு வழிகாண அவன் பறக்கிறான். கற்பனைபல்ல, காற்றில்!

கடந்த வாரம் ஈழநாடு வாரமலரில் பிரசுரமான 'நிலம் நோக்கும் நாள் எதுவோ? என்ற அனலை ஆறு. இராசேந்திரம் அவர்களுடைய கதையினைத்தான் கூறுகிறேன்.

பத்து வருடங்களுக்கு முன் படிப்பித்த பழைய ஆசிரியரைப் பயணவழியில் பார்த்துவிட்டு பூமி பார்க்கும் பிரபாகர் நிலை பாராட்டக்கூடியது! தனது மாணவன் கஷ்டப்படுகிறான் என்பதைக்கேட்டுவிட்டு ஆசிரியர் பட்ட ஏமாற்றத்தினை சில சொற்களால்மட்டும் காட்டியிருக்கிறார் கதாசிரியர். "தங்கச்சிமார் ஆரேனும் முடிச்சிட்டினியா?'... ஆசிரியர் விசாரிக்கிறார்! எமது மண்ணிற்கேயுரித்தான தாற்பரியத்தை, பாரம்பரியத்தை விளக்கப் பண்பட்ட சொல்லாட்சி! நன்றாக உறைக்கிறது.

தங்கராசா இன்று ஓர் இலட்சம் பெறுமதியான சீதனத்தோடு திருமணம் செய்துவிட்டான். அவனால் அவனுடைய சகோதரிகளும் வாழ்வு கண்டுவிட்டார்கள்! நாலைந்து வருஷங்கட்கு முன்பு பிரபாவிடமும் நாலாயிரம் இருந்திருக்குமானால்... பிரபா மனமும் அங்கலாய்க்கிறது! பிறந்தால் தான் மட்டும் வாழ்ந்தால் போதாது! தான் வாழ்வது உடன் பிறந்தோர் நல்லாய் வாழ்வதற்காக— இது எமது சமூகச் சாபக்கேடு! அந்தக் கட்டிற்குள்— போலி அமைப்பிற்குள் பிரபாவுஞ் சிக்கி முடிவில் இந்த மண்ணை விட்டு வேறுவழியின்றி பறக்கிறான் பணத்திற்காக!

பறப்பவன் நிலையை எண்ணி-அவன் நல்லவரவை யெண்ணி ஏழெட்டு மனங்கள் கற்பனையில் ஏழெட்டு ஆண்டாவது பறந்தாக வேண்டும்! வயது பறந்தாலும் பறவாயில்லை! வறுமை பறந்தால் சரி! முதுமை சூழ்ந்தாலும் போகட்டும். மணம் சூழ வேண்டும். பவுசு சூழ வேண்டும்!

- தற்காலச் சீரழிவுகளைக் காட்ட சிறந்த கரு! சீரிய நடை.

கதையின் முடிவு காலத்தின் முடிவு......

—புலோலியூர்
ஆ. இரத்தினவேலோன்

## 'நிர்ப்பந்தங்கள்' குறுநாவல்

'ஈழநாடு வாரமலர்' வாசகர்களுக்கு மிகவும் பிடித்தமான கதாசிரியர் கோகிலா மகேந்திரன் எழுதும் 'நிர்ப்பந்தங்கள்' என்னும் சுவையான குறுநாவல் அடுத்த வாரம் ஆரம்பமாகின்றது.

## கலைஞன்

கலைஞன் தன் உள நிறைவுக்காகவும் ஆத்ம திருப்திக்காகவும் கலையைப் படைக்கிறான். இலக்கியம் படிக்கும் போது நமது உள்ளம் செம்மையடைகிறது. சான்றோர்களின் வாழ்க்கையின் அனுபவங்களை நாம் இலக்கியத்தின் வாயிலாக அறியும் போது பண்பாளர்களாக மாறுகிறோம்.

— அந்தனி ஜோன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களும் எழுத்தார்வமும்

பாட நேரங்களில் கொப்பிகளுக்கும், பாடநூல்களுக்குமிடையில் தம்மை மறைவாகியபடியே மாணவர்களால் படிக்கப்படும் பெரும்பேறு பொதுவாகப் பல தமிழ் நாவல்களுக்குக் கிடைத்து வருகிறது. எனினும், துரதிர்ஷ்டவசமாக பலரும் தாம் படிக்கும் நூல்கள் பற்றிய தெளிவின்மை காரணமாக நச்சு இலக்கிய ஆக்கிரமிப்பிற்கும், அவற்றின் தரக்குறைவான நோக்கங்களுக்கும் உள்ளாக்கப்படுகிறார்கள். மிகச் சில வேளைகளில் இலக்கியம் என்றே கூறமுடியாத, கீழ்த்தரமான பல ஆபாச நூல்களும் மாணவர்களின் கைகளை எட்டுகின்றன. மாணவர்கள் படிக்க வேண்டிய நூல்கள் எவை என்பது பற்றிய போதுமான பிரக்ஞையை மாணவர்க்கு ஊட்ட ஆசிரியர்கள் தவறி விடுகிறார்கள் என்றே குறிப்பிட வேண்டும்.

இலக்கியத்தின் இருவகை அனுபவமுறைகளில் மேலே கூறிய வாசகன் என்ற பட்டத்திலன்றி மறுவகையாக எழுதியும் சில மாணவர்கள் இலக்கியம் மீது தாம் கொண்டுள்ள ஆர்வம், ஆளுமை என்பவற்றை வெளிக்கொணர்கின்றனர். எவ்வெவ் நூல்களைப் படிக்கிறார்கள் என்பதை ஆய்வு செய்வது போன்றே எவ்வாறு எழுதுகிறார்கள் என்பது பற்றியும் விழிப்பாயிருக்க வேண்டும். "பிறக்கும் போது மனிதன் நடப்பதில்லை" என்ற பழமொழிக்கிணங்கப் பிறக்கும் போது எவரும் எழுதுவதில்லை. ஏதோவொரு குறித்த சூழலில் எழுத ஆரம்பிக்கலாம். அச்சூழல் சிலருக்குப் பத்து வயதிலும், வேறு சிலருக்குப் பதினைந்து இருபது வயதுகளிலும், வேறு சிலருக்கு முப்பது நாற்பது வயதுகளிலும் ஏற்படுகிறது. சிலருக்கு இத்தச் சூழல் ஏற்படாமலே விட்டுவிடுவதாலேயே அவர்கள் எழுதாமலே விட்டுவிடுகிறார்கள். மாணவர் பருவத்தில் எழுதுவதற்கான வாய்ப்பு அதிகமென்றே கூறலாம்.

# மாணவர் எண்ணம்

மாணவரிடையே எழுத்தாற்றலை வளர்க்க முயல்வது சிரமம் என எண்ணுவது மடமை ஆகும். எழுதும் மாணவர்களின் திறனை ஊக்குவிக்குமாறு கல்லூரிகளில் மாணவர் சஞ்சிகைகள் வெளியிடப்படலாம். மாணவர் உணர்வைப் பொறுத்தவரை அவர்களின் ஓய்வு நேரத்தையும், எழுத்தாற்றலையும், ஓவியத்திறனையும் சரிவரப் பயன்படுத்தி அதன்மூலம் இவ்வாறான ஒரு சஞ்சிகையை வெற்றிகரமாகவும், நல்ல முறையிலும் நடத்துதல் இயலும்.

**செல்வன் விஜேந்திரன்**
(மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை)

பிறவி எழுத்தாளன் என்பது போலித்தனமான கருத்தென்றே நான் நினைக்கிறேன். ஏனெனில் பல எழுத்தாளர்களும் எழுதவேண்டும் என்ற ஆர்வம் உந்துகோலாக எழுதி, எழுதி உயர்ந்தவர்களே. எனவே சரியான ஆர்வம் ஊட்டப்பட்ட ஒருவன் எழுத்தாளனாக மாறுதலுக்குரிய சந்தர்ப்பம் அதிகமென்றே நினைக்கிறேன். மாணவப் பருவத்தில் இவ்வாறான ஆர்வம் ஊட்டப்படக்கூடிய சந்தர்ப்பங்கள் உள்ளன. இச்சந்தர்ப்பங்களை சரியாகப் பயன்படுத்தப்படின் ஒவ்வொரு கல்லூரியும் வருடா வருடம் எழுத்தாளர்களையும் சமூகத்திற்குத் தரும் என நம்பலாம்.

அச்சுக்கோர்ப்பவனின் முன்னால் விரிக்கப்பட்டால்தான் அது ஒரு சஞ்சிகை என்பது உண்மையன்று. வெறுமனே கையெழுத்திலோ, தட்டச்சிலோ, கல்லச்சிலோ உண்மையான தரமான சஞ்சிகை வெளிவரல் இயலும். நம்மிடையே கல்லச்சில் வெளிவந்த சஞ்சிகைகள் பல பிற்காலத்தில் அச்சேறி வெற்றியீட்டின. இன்றைய நிலையில் சஞ்சிகை அச்சேறுவதென்பது அதிக சிரமம், நஷ்டம் என்பவற்றோடு குறைந்த பயனையே தரும் என்பதும் அனுபவ உண்மை.

முன்பிருந்ததிலும் பார்க்க மிகக் குறைவாகவே இப்போது கையெழுத்துச் சஞ்சிகைகள் வெளிவருகின்றன. அதே வேளை இம்முயற்சிகளில் மாணவர் மன்றங்களின் பங்கு கணிசமானது என்பதையும் இங்கே நினைவுகூர வேண்டும். மாணவர் மன்றங்களின் சஞ்சிகைகள் முழுமனே வெற்றியீட்டாவிடினும் அதிகளவு வாசகப்பரப்பைக் கொண்டனவாய் உள்ளன.

ஈழநாட்டு எழுத்தாளர் மத்தியில் நிலைத்த இடங்களைத் தமதாக்கிக்கொண்ட மஹாகவி அ. ந. க., அ. செ. மு. போன்றோரை உள்ளிட்டு ஏராளமான பல்துறை சார்ந்த எழுத்தாளர்களை உருவாக்கிப் புகழ்கொண்ட மகாஜனக் கல்லூரி தொடர்ந்தும் இவ்வாறு எதிர்கால எழுத்தாளர்களை உருவாக்கிவருகிறது. கல்லூரி உயர்தர மாணவர் துணைமன்றங்களில் ஒன்றான படைப்பு இலக்கிய மன்றம் முழுமனே மாணவர்களின் எழுத்தாற்றலை வளர்ப்பதையே தனது ஒரே நோக்கமாய்க்கொண்டது. காத்திரமான இலக்கியப் படைப்புகளை செய்வோரின் உரைகள் மாணவர்களின் இலக்கிய ஆர்வத்துக்கு வழிகோலும் என்பது மன்றத்தின் எண்ணமாகும். வருடாவருடம் சிறுகதை, கவிதை எனுமிரு துறைகளிலும் போட்டிகளை இம்மன்றம் கல்லூரி மாணவரிடையே நிகழ்த்திவருகின்றது. வெற்றியீட்டுவோர்க்கான பரிசுகளைக் கல்லூரியின் பழைய மாணவர்கள் வழங்கி உற்சாகம் தருகின்றனர். இவ்

(9ம் பக்கம் பார்க்க)

'கண்டோஸ்'

## மாணவர் சிரிப்பு

ஆசிரியர்: சுந்தன் மரத்தால் விழுந்தான் என்ன காலம்?
மாணவன்: கஸ்ர காலம் சார்

வி. ஸ்ரீதரன்
பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்
சுழிபுரம்.

ஒருவர்: இங்கே "தங்க" வீடு உண்டா?
மற்றவர்: இங்கே "தகர" வீடு தான் உண்டு.

வே. சத்தியேந்திரன்
யாழ். மத்திய கல்லூரி

தகப்பன்: தம்பி நீ தான் விஞ்ஞானம் படிச்சிருக்கிறியே இந்தத் தேனை கலப்படமற்றது எண்டு எப்படியடா நம்புறது?
மகன்: வேணுமெண்டு உமியை தடவிப் பார்த்து நரச்சால் வாங்குங்கோ!

கி. முருகதாசன்
இந்துக் கல்லூரி
சாவகச்சேரி.

ஆசிரியர்: டினேஷ் பூமி உருண்டை வடிவமானது என்பதற்கு ஒரு உதாரணம் கூறு?
டினேஷ்: பூமி உருண்டையாக இருப்பதால் தான் உங்களை எந்த ஊருக்கு மாற்றினாலும் நீங்கள் மீண்டும் இந்த ஊருக்கு வந்துவிடுகிறீர்கள்.

சே. பாமதி
இந்துக் கல்லூரி
[illegible]


# புதிய முதலீட்டாளர்களுக்கு ஓர் நற்செய்தி

# த பினன்ஸ் கம்பனி லிமிட்.

1980 ஏப்பிறல் 22-ந் திகதி தொடக்கம், எமது நிதி நிறுவனம் நிலையான வைப்புகளுக்கும், சேமிப்புக் கணக்குகளுக்கும் அதிக அளவு வட்டி விகிதத்தை வழங்குகின்றது என்பதைப் பெருமையுடன் தெரிவிக்கின்றேம்.

**நிலையான வைப்புக் கணக்குகள்:-**

| காலம் | வட்டி விதம் | |
|---|---|---|
| 24 மாதங்கள் | 20% | வட்டி மாதாந்தம் வழங்கப்படும். |
| 36 ,, ,, | 21% | வட்டி ,, ,, |
| 18 மாதங்கள் | 22% | வட்டி கால முதிர்வின்போது வழங்கப்படும் |
| 24 ,, ,, | 24% | வட்டி ,, ,, ,, |
| 36 ,, ,, | 25% | வட்டி ,, ,, ,, |

TFC

ஆகக் குறைந்த வைப்பு ரூபா 500 - மட்டுமே

★ சேமிப்புக் கணக்குகள் 15% வருடாந்த வட்டி

இலங்கையில் ஆகக்கூடிய கிளை ஸ்தாபனங்களையும், 40 வருட அனுபவத்தையும் உடைய ஒரே வர்த்தக நிதி நிறுவனம்

# த பினன்ஸ் கம்பனி லிமிட்டெட்

இல. 191-249 C, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். போன்: 7680.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகம்பால் (கல்லுண்டாய்)
தினசரி 6-45, 9-45
சனி, ஞாயிறு 2-45
ஜோதி - சுஜாதா
தீபம்
(கலர் - புதியபிரதி)

ஹரன் சாவகச்சேரி
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன்-ஜெமினி
நான் அவனில்லை
(புதிய பிரதி)

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
10-30, 2-30 6-30, 9-30
ஜோதி-சரோஜாதேவி- எம். ஆர். ராதா நடித்த
பாகப் பிரிவினை

லிடோ (யாழ்.நகர்)
போன்: 7898
தினசரி 4 காட்சிகள்
மரகதம் (புதிய பிரதி)

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
ஜெய்சங்கர்-அசோகன்-நாகேஷ்-ராதிகா-ஜெயச்சந்திரன்
நடிகமணி-டிக்கிரி நடராஜா
ரத்தத்தின் ரத்தமே
(வண்ணக்கலர்)
டைரக்ஷன் : ஜோ தேவ் ஆனந்த்

வின்ஸர்
(யாழ்ப்பாணம்)
தொலைபேசி: 466
தினசரி 5 காட்சிகள்
தினசரி: 10-00, 1-30, 4-30, 7-15 10-00
சுதாகர்-ராதிகா-விஜயன்-ரதி
மற்றும்பலர் நடித்த
நிறம் மாறாத பூக்கள்
(வண்ணப்படம்)

ராணி (யாழ்நகர்)
தினசரி 5 காட்சிகள்
10-00, 1-00, 4-00, 7-00, & 9-45
இந்தியாவில் தொடர்ந்து 200 நாட்கள் ஓடி
வெள்ளிவிழா சாதனை ஏற்படுத்தியது
* கமலஹாசன் (இருவேடங்களில்)
* ஸ்ரீதேவி மற்றும்பலர் நடித்த
கல்யாண ராமன் (கலர்)
தொடர்ந்து கொட்டகை நிறைந்த காட்சிகளாக
காண்பிக்கப்படுவதால், ரிக்கற்றுகளுக்கு முந்தி
கொள்ளுங்கள்.

ராஜா (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி
விஜயா
நாகேஷ்
திருடன்
(புதிய பிரதி)

SANTHI JAFFNA Phone 7641
Daily 10-30, 2-30, 6-45; 7-00 & 9-30 p.m.
ROY SCHEIDER (THE SEVEN UPS)...
DUSTIN HOFFMAN......in
'MARATHON MAN'
—A THRILLER — COLOR—
Next Attraction "Sharks' Treasure"
(color)

மனோஹரா A யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
Daily at 10-30, 2-30, 4-45, 7-15 & 9-45
NOBODY, BUT "NOBODY" KNOWS
THE TROUBLE HE'S IN
HENRY FONDA — TERENCE HILL
In
My Name is Nobody
(Scope—Color)

வெஸ்லி மானிப்பாய்
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சுந்தராம்பாள் நடித்த
ஒளவையார்
(புதிய பிரதி)

## பணம் பொருள் ...

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

### வெளிநாட்டவரைக் கவர்வதற்கு

விஸ்தரிக்கப்படும் விற்பனை நிலையங்கள்மூலம் பணம் பொருட்களின் வெளிநாட்டவர் பாவனையை உண்டாக்கலாம். அதாவது இலங்கைக்கு வருடாவருடம் உல்லாசப் பயணிகளாக வரும் வெளிநாட்டவருக்கு பனம்பொருட்களை இவ்விற்பனைவு நிலையம் அறிமுகப்படுத்த வசதியளிக்கும். எனவேதான் உல்லாசப் பயணிகளால் பெரிதும் கவரப்படும் கொழும்பு, நுவரெலியா, கண்டி போன்ற நகரங்களில் மிக விரைவாக இவ்விற்பனை நிலையங்கள் நிறுவப்படல் அவசியமாகிறது மேலும் இவ்விற்பனை நிலையங்களின் மூலம் புதிதாக ஆக்கப்படும் பனம்பொருட்களை மக்களுக்கு அறிமுகஞ்செய்தல் வசதியாக அமையும். பல அழகு சாதனப் பொருட்கள் பனை மூலவள மூலம் ஆக்கம்பெற்றுவருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ். நகரில் நிறுவப்பட்டதுபோல விற்பனை நிலையங்கள் இலங்கையின் எல்லாப் பகுதிகளிலும் கவர்ச்சியான முறையில் நிறுவப்

(10-ம் பக்கம் பார்க்க)

## சீதையின்....

[6-ம் பக்கத் தொடர்ச்சி]

ஆனால் அத்தகைய வில்லாண்மை படைத்தவன் இன்னும் என்னை மீட்க வரவில்லையே என வருந்துகின்றாள்.

அறியாதவர் பால் அன்பு கொண்டு அவர்களை உயிர் நண்பனாகக் கருதியவன் இராமன் கவிகைக் கரை வேடன் குகன், இராமன் தோழனானதை எண்ணிய சீதை கலங்குகிறாள். அந்த நட்புக்கும் தனக்கும் இராமனுக்குமிடையே யுள்ள நெருங்கிய அன்புறவுக்குமுள்ள

(10-ம் பக்கம் பார்க்க)

## மாணவர்களும் ..

1-ம் பக்கத் தொடர்ச்சி

வாருன நடவடிக்கைகள் எல்லாக் கல்லூரிகளிலும்நிகழ்வது மாணவரின் ஆர்வத்தைக் கூட்டும்.

நாளைய உலகம் மாணவ சமுதாயத்திடமிருந்து எதிர் பார்க்க எத்தனையோ உள்ளன எனினும் இலக்கியத்தையும் சேர்த்தே எங்கள் வழிகாட்டுதல் இருத்தல்வேண்டும் எனவே மாணவர்கள் இயலுமான வரை எழுத்தாற்றலை வளர்த்தல்வேண்டும். இக்கல்லூரிகளின் நிர்வாகங்கள் வழி வகுத்துத்தரவேண்டும். மாணவர்கள் பொறுப்புணர்ந்து ஓய்வுநேரங்களையும் நல்ல ஏய்ப் புக்களையும் பயன்படுத்தித் தமது சிறிய துறையில் வளர்ப்பது நாட்டின் எதிர்காலத்தை நல்லவழி நடத்த உதவும் என்பது எனது நம்பிக்கை.

## சிறுகதை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கிற சில்லறை மல்லறைகளைப் போட்டு சேர்த்துக்கொண்டு வா...கொஞ்சநாளில் சொந்தமாக நீயும் ஒரு சைக்கிளை வாங்கலாம். அல்லது வியாபாரத்துக்கு வைத்துக்கொள்ளலாம்...சிறுதுளி பெருவெள்ளம்' ஒரு உவமையுடன் தனவி எப்பவோ தனக்குச் சொன்ன புத்திமதி, அவனுக்காவது உபயோகப்படும் என நினைத்துக்கொண்டார்.

'இம்பட்டுக்காலமாகவுழைக்கிற உங்களால கூட முடியலை; எப்படித்தான் என்னால முடியும்...?' ஏக்கத்துடன் கேட்கிறான் அந்தச் சிறுவன்.

ஹீம் காக்கா வாயடைத்துப்போய் நிற்கிறார். இவர் சென்றுகொண்டிருக்கும் கரடுமுரடான அதே வாழ்க்கையைப் பின்தொடரும் அந்தச் சிறுவன் இன்னும் எத்தனையோ வேறும் புத்திட தியினால் இதிலிருந்து விடுபட்டு புதிய பாதை ஒன்றை அமைத்துவிட முடியுமா...?

(யாழ் சுதர்சன்)

லங்கெம்
பொருட்களை
உபயோகிப்போருக்கு
எச்சரிக்கை

எமது விவசாய ரசாயனப் பொருட்களின் சில பிரபல்யமான பெயர்களை ஏமாற்றுக்காரர்கள் சிலர் தமது போலிப் பொருட்களை சந்தைப்படுத்த பயன்படுத்துகிறார்கள் என எமது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. பின் வருவனவற்றை வைத்து எமது பொருட்களை இனங் கண்டுகொள்ளலாமென பொதுமக்களுக்கு தெரிவிக்க விரும்புகிறோம்.

1. ஆர்ஓபிபி மூடி — பூச்சி நாசினிகளுக்கு சிவப்புமூடி
களை கொல்லிகளுக்கு மண் நிற மூடி.
கீழே காண்பிக்கப்பட்டுள்ள
லங்கெம் அடையாளத்துடன்

LANKEM

2. லங்கெம் லேபல்களின் தனிப்பட்ட வடிவம்,
3. லங்கெம் லேபலிலுள்ள தொடர் இலக்கம்.

எமது பெயர்களை சட்டவிரோதமாக, அனுமதியின்றி உபயோகிப்பதற்கு காரணமாகவுள்ளவர்களை கைதுசெய்வதற்கு உதவியாக தகவல் தருவோருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

லங்கெம் சிலோன் லிமிட்டெட்,
760, 762, பேஸ்லைன் ரோட்,
கொழும்பு 9. தொலைபேசி: 98292 – 96.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண மக்களுக்கு
ஓர் நற்செய்தி......
CIC பெயின்ற் வகைகளான
டியுகோ - DUCO
டியுலக்ஸ் - DULUX
பென்றலைற் - PENTALITE
சகல வர்ணங்களிலும்
கிடைக்கிறது
கதிர் ஹாட்வெயர்ஸ்
(TILLY'S GROUP)
11/1-2, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். போன்:7130

## தாலி திருட்டு
## கணவன் உண்ணாவிரதம்

(மாவிட்டபுரம்)
கோவிலுக்குச் சென்றுவிட்டு திரும்பிய தமது மனைவியின் தாலிக்கொடி திருடர்களால் கொள்ளையடிக்கப்பட்டதையடுத்து, முருகபக்தரான அவரது கணவர் உண்ணாவிரதம் இருந்துவருகிறார்!

மாதகல் நுணசை முருகமூர்த்தி கோவிலில் முருகன் மீது பழியைச் சுமத்தி இவ்வாறு வேலுப்பிள்ளை என்பவர் உண்ணாவிரதமிருக்கிறார். இவரது மனைவி மேற்படி கோவில் கும்பாபிஷேக விழாவிற்குச் சென்றுவிட்டு வீடு திரும்பி, 22 ஆயிரம் ரூபா பெறுமதியான தாலிக்கொடியை வீட்டில் கழற்றி வைத்துவிட்டு நித்திரை செய்த போது அத்தாலிக்கொடியை திருடர்கள் கொள்ளையடித்துச் சென்றிருந்தனர். முதலாம் திகதி முதல் அவர் உண்ணாவிரதம் இருந்துவருகிறார்.

மலிவு விற்பனை
சிறந்த ரக தையல் நூல்கள்
சணுசலா நூல் -
முயல் நூல் -
பிலாஸ்டிக் நூல் -
நைலோன் நூல் -
பொலியஸ்டர் நூல் -
கொட்டன் நூல் -
வியாபாரிகளுக்கு விசேஷ கழிவுண்டு
சிக்கோ ரேடர்ஸ்
43, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

## ★ யாழ்ப்பாணத்தில் ஒரு கலைமேதை ★

# குருவின் நட்டுவாங்கத்துக்கு இன்று ரங்கா ஆடுகிறார்

பரதநாட்டியத்தின் மறுமலர்ச்சிக்கு ருக்மணிதேவி அருண்டேல், ஈ. கிருஷ்ணஐயர், வழுவூர் ராமையா பிள்ளை போன்றோர் காரணமாக இருந்தார்கள். ஆனால் குச்சிப்புடி நடனத்தின் மறுமலர்ச்சிக்கு காரணமாக இருந்தவர் ஒருவர் தான். அவர் வேம்பட்டி சின்ன சத்யம்.

குச்சிப்புடி கிராமத்தவர்களின் பரம்பரையிலேயே வந்தவரான சின்ன சத்தியம், ஆந்திராவிலிருந்து சென்னையில் குடியேறியது, குச்சிப்புடி நடனம் இந்தியாவிலிருந்து வேறு நாடுகளுக்கும் 'குடிபெறுவதற்கு' காரணமாக அமைந்தது.

மரபோடு ஒத்ததாக அவர் இக்கலைக்கு மெருகூட்டினார்.

அவரது ஆற்றல், உழைப்பு, அவரின் கலைப் பங்களிப்பு என்பன ஒவ்வொரு குச்சிப்புடி அரங்கிலும் நம்மை வியப்படையவே வைக்கும்.

குருவேம்பட்டி சின்ன சத்தியம் ஒரு கலைப் பாரம்பரியத்துக்கு அற்புதமான மெருகு கொடுத்த ஓர் அரும் சிற்பி. மதிப்பிட முடியாத அவரின் பணிக்காக மதிப்போடு போற்றப்படுபவர். இந்தியாவில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற கலை ஆசான்களில் உயர்வான ஒருவர். சிறந்த ஓர் ஆடல் ஆசானுமான அவரின் நட்டுவாங்கமும் தனித்துவம் வாய்ந்ததுதான்.

### மாலி

குச்சிப்புடி நடனத்தின் 'சர்வதேச கேந்திரமான' வேம்பட்டி சின்ன சத்தியத்தின் சென்னை 'குச்சிப்புடி ஆர்ட் அக்கடமி'யிலிருந்து உதித்தவர்கள் தான் இந்நடனத்தில் மிகப் புகழ் பெற்ற முதலாவது பெண் .......மினி கிருஷ்ணமூர்த்தி, இளைய தலைமுறையினருள் இப்போது சிறந்து விளங்குபவரான ஷோபா நாயுடு ஆகியோர். பிரசித்தி பெற்ற ஆண் கலைஞரான காமதேவ் இப்போது லண்டனிலேயே தங்கியிருக்கிறார்.

இந்த 'கேந்திரத்தி'லிருந்து தான் இலங்கைக்கும் இந்நடனம் முழுமையாக அறிமுகப் படுத்தப்பட்டது. இலங்கையில் அந்த அறிமுகத்தைச் செய்தவர் ரங்கா விவேகானந்தன்.

தாம்பாளத்தின் மீது நின்று, தலையில் செம்பும், கைகளில் தீபமும் ஏந்தி ஆடும் ஓர் உருப்படி தான் குச்சிப்புடி நடனம் என்று அறிந்திருந்த நமக்கு, முழு நேர கச்சேரி செய்யக்கூடிய அக்கலையின் விசாலத்தை அவர்தான் இங்கு முதன்முதலில் அறிமுகமாக்கினார். ஈழத்தில் இக்கலைப் பாரம்பரியத்தின் முதற் படிக்கல்லாக தன்னுடைய மாணவி ஒருவரையும் ரங்கா அரங்கேற்றி விட்டார். இது ஒரு முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியாகும்.

இலங்கையில் இந்நடனக் கலையை அறிமுகமாக்கியது மட்டும் தான் ரங்காவுக்கு புகழும், பெருமையும் அல்ல. ரங்கா சர்வதேச ரீதியில் - இந்நடனத்தின் அதி சிறந்த - முதன்மை வாய்ந்த ஒரு நர்த்தகி. அதனால் இந்த நாட்டுக்கும் ஒரு பெருமையை அவர் ஈட்டித்தருகிறார். அதுவும் அவருக்குப் பெருமை தான்.

கொழும்பில் நடைபெற்ற ரங்காவின் நிகழ்ச்சியும், யாழ்ப்பாணத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் நிகழ்ச்சியும் இலங்கையில் முதன் முதலாக இயந்தைப் பின்னணி - நட்டுவாங்கத்துடனான தனி குச்சிப்புடி நிகழ்ச்சிகள் என்ற சரித்திர நிகழ்வாகின்றன.

கூடவே பின்னணியில் 'ஒரு வாத்தியமோ' என்று அந்த மேதையின் நட்டுவாங்கம் ஒலிக்கிறது.

## சுத்தானந்தரின் பிறந்த நாள்



யோகியார் சுத்தானந்த பாரதியார் - பிறந்த நாள் இன்று.

குழந்தை வயதிலேயே தெய்வீக அருள்பெற்று கவி பாடத்தொடங்கிய சுத்தானந்தர் நூற்றுக்கணக்கான நூல்களை எழுதித்தவித்துள்ளார். முதுமையெய்திவிட்ட இந்த நிலையிலும் கூட உலக அமைதிக்காகவும்-ஷேமத்திற்காகவும் மௌன விரதம் யோக நிஷ்டியும் அனுஷ்டித்துவரும் யோகியார் எப்பொழுதும் போலவே சுறுசுறுப்புடன் செயல்பட்டுவருகிறார். சென்னையிலுள்ள தமது யோகசமாஜ மடத்தில் அமைதியாக இருந்து அருள் ஒளிபரப்பிவரும் யோகியாரின் ஒரு தோற்றம் இது.

### திறப்புக்கோர்வை

நல்லூர் வீதி ஆயக்கடைச் சந்திக்கருகில் கிடந்து எடுக்கப்பட்ட திறப்புக்கோர்வை ஒன்று ஈழநாடு காரியாலயத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. உரியவர் பெற்றுக்கொள்ளலாம்.

### சீதையின்...

(9-ம் பக்கத்தொடர்ச்சி)

வேறுபாட்டைக் கணித்துப் பார்க்கின்றாள். திருமணத்தின் போது நடந்த நிகழ்ச்சிகளை மீண்டும் நினைத்துப் பார்க்கிறாள்.

அறிவித்தல் -- மீன் விற்பனை

யாழ். பஸ் நிலையத்துக்கு முன்பாகவுள்ள "ஓட்டோஸ்" நிறுவனத்தில் யாழ். நகர மக்களின் மீன் தட்டுப்பாட்டை நீக்கும்முகமாக, சீநோர் அபிவிருத்தி நிறுவனம் தரமான மீன் வகைகளை குறைந்த விலையில் விற்பனை செய்து வருகின்றது. யாழ். செயலகத்திலுள்ள (கச்சேரி) எமது மீன் விற்பனைப் பிரிவிலும் மீன் வகைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

கிழமை நாட்கள் காலை 8 மணி முதல் மாலை 5 மணிவரையும் மேற்படி பிரிவுகளில் விற்பனை நடைபெறும்.

பொதுமுகாமையாளர்
சீ-நோர் அபிவிருத்தித் திட்டம்,
காரைநகர்.
5721

மரண அறிவித்தல்

திருமதி பரமேஸ்வரி விவேகானந்தராசா

திருமதி பரமேஸ்வரி விவேகானந்தராசா காலமாகிவிட்டார். இவர் உமா இண்டஸ்றீஸ் உரிமையாளர் திரு. விவேகானந்தராசாவின் அன்பு மனைவியும், புலோலி தெற்கைச் சேர்ந்த திரு. சின்னத்தம்பி தாமோதரம்பிள்ளையின் மகளும், சுப்பிரமணியம் பரமநாதன், சரஸ்வதி, மங்கையற்கரசி, கிருஷ்ணானந்தம், யோகேஸ்வரி, சிவபாதசுந்தரம், மலேஸ்வரி ஆகியோரின் சகோதரியும், திருமதி சரவணமுத்து பாக்கியத்தின் மருமகளும், திரு யோகராஜா (கயாஜு), சண்முகராசா (இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்), தியாகராஜா (திருநெல்வேலி சக்தி நியூடிகாஸ் உரிமையாளர்), திருமதி ரங்கநாதன் பரமேஸ்வரியின் மைத்துனியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று நண்பகல் 12-00 மணியளவில் 24, வளாக ஒழுங்கை, திருநெல்வேலியிலிருந்து கோக்குவில் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
5741

மரண அறிவித்தல்

திருமதி பத்மாவதி சவரிமுத்து

மானிப்பாயைச் சேர்ந்த திருமதி பத்மாவதி சவரிமுத்து காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை, புத்திரசிகாமணியின் அருமை மகளும் சவரிமுத்து (A. G. A. Office, சண்டிலிப்பாய்)வின் அன்பு மனைவியும், பத்மசேகர், யாமதியின் தாயாரும், சந்திராவதி, இந்திராவதி, வரதன் (பட்டினசபை, மானிப்பாய்), மொனிக்கா, பேபி ஆகியோரின் சகோதரியும், குமாரவேலு (சவூதி அரேபியா), டேவிட் (சவூதி அரேபியா) ஆகியோரின் மைத்துனியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் இன்று 11-05-80 ஞாயிறு மாலை 4 மணிக்கு நல்லடக்கம் செய்யப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகின்றோம்.
5738

மரண அறிவித்தல்

Dr. N. கோபாலபிள்ளை

Dr. N. கோபாலபிள்ளை L. M. S. இளைப்பாறிய மலாயன் பென்சனியர் காலமானார். இவர் சரஸ்வதியின் அன்புக்கணவரும், தேவதாசன் (U. K.), சத்தியா, Dr சங்கரன் (M. O. H. கெக்கராவல Gokerela), ஞானி ஆகியோரின் அருமைத் தந்தையும், Dr. சேனாதிராஜா, ரேஸ் ஆகியோரின் அன்பு மாமனாரும் சித்திரா, மீரா, ஹரி ஆகியோரின் அருமை பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 11-05-80 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு பலாலிவீதி, 3-ம் ஒழுங்கை, 19 ம்இலக்க இல்லத்தில் நடைபெறும்
5726

(9-ம் பக்கத்தொடர்ச்சி)

பட்டு பனம் பொருட்களை விற்பனை செய்யின் யாழ். மாவட்டத்தின் பொருளாதார நலனும் உயர்வும் இலங்கையின் பொருளாதார நலன் ஆரோக்கியப்படும். உள்நாட்டு மக்களின் பாவனைப் பொருட்களின் தேவைகளில் ஒரு பகுதியை பூர்த்திசெய்வதுடன் பனம் பொருட்கள் வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதியாகி ஓரளவு அந்நியச் செலாவணியையும் சம்பாதித்துத் தருவதற்கும் மேலும் நம்பிக்கையற்ற முறையில் பனந்தொழிலில் ஈடுபடும் ஏராளமான உற்பத்தியாளரும்இவ்விற்பனை நிலையங்களின்செயற்பாட்டால் நம்பிக்கை பெறுவார்கள். அத்துடன் இவர்கள் தமது வருமானத்தையும் உயர்த்திக்கொள்வர்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 11-5-80 ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News paper at the General Post office Sri Lanka under No CE/8948/ 78 The Eelanaadu, Post Box No 49, Telegram "Eelanaadu, Phone: 389

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org